எழுத்து

இந்த ஏட்டில்

ஏர் புதிதா?
கு. ப. ராஜகோபாலன்

பண்பு ஒன்றே
வல்லிக்கண்ணன்

புதுக்கவிதை உருவ ஆய்வு
சி. கனகசபாபதி

இரு தொழில்
சி. மணி

பக்ஷியின் மணம்
மாதவிக்குட்டி

திருடர்கள்
கவட்டாக்கி மொக்வாமி

தலைப்பு
ப. லட்சுமணன்

②

ஆசிரியர்:
சி. சு. செல்லப்பா

99

மார்ச் 67
பைசா 50

எழுத்து

ஆசிரியர்: சி. சு. செல்லப்பா

ஒன்பதாம் ஆண்டு ஏடு 99 மார்ச் 1967

தலையங்கம்
விமர்சகர் ரா. ஸ்ரீ. தேசிகன் 3
தமிழ் எழுத்தாளர் சங்கம் 4
டெஹல்வி
டெல்லி கடிதம் 5
சி. மணி.
இரு தொழில் (கவிதை) 6
மாதவிக்குட்டி
பக்ஷியின் மணம் (சிறுகதை) 7
வல்லிக்கண்ணன்
பண்பு ஒன்றே (கவிதை) 9
சி. கனகசபாபதி
புதுக் கவிதை – உருவ ஆய்வு 11
கு. ப. ராஜகோபாலன்
ஏர் புதிதா ? (கவிதை) 13
பிளேடோ
பின்பற்றல் கொள்கை 14
கவட்டாக்கி மொக்வாமி
திருடர்கள் (ஓரங்க நாடகம்) 17
ப. லெட்சுமணன்
தவிப்பு 21
குறிப்புகள்
இலக்கிய கூட்டங்கள் 23

⊙

எழுத்து—மார்ச் 1967 : ஏடு 99 : ஒன்பதாம் ஆண்டு.

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம் : எழுத்து, 19—A, பிள்ளையார்கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

சந்தாவிகிதம் : தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ 6/- மூன்று ஆண்டுகள் ரூ. 15/-
வெளிநாடு : ஆண்டுக்கு ரூ. 8/– மூன்று ஆண்டுகள் ரூ. 20/-

இலக்கிய கலைக் கட்டுரைகளை வெளியிடும் : கட்டுரைகளுடன் ஸ்டாம்பு ஒட்டிய, தன் விலாசமிட்ட கவர்கள் அனுப்பப்பட வேண்டும். சுருக்கமாக எழுதப்பட்ட கடிதங்கள் கருத்துகள், எழுத்து அரங்கம் பகுதியில் வெளியிடப்படும்.

கடிதப் போக்கு வரத்து, கட்டுரை அனுப்புதல் : மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

எழுத்து

ஆண்டு 9 | மார்ச் 1967 | ஏடு 99

தலையங்கம்

விமர்சகர் ரா. ஸ்ரீ. தேசிகன்

கொஞ்ச காலமாக நோய் வாய்ப்பட்டு இருந்த பேராசிரியர் ரா. ஸ்ரீ தேசிகன் தன் அறுபத்தி ஐந்தாவது வயதில் 20–2-67–ல் காலமாகி விட்டார். மதுரையில் மதுரை கலாசாலையிலும் பிறகு சென்னையில் மாநிலக் கல்லூரியிலும் வேலை பார்த்து ஓய்வு எடுத்துக் கொண்ட தேசிகன் இங்கிலீஷ் மொழி பேராசிரியராக இருந்ததால் மட்டும் குறிப்பிடத்தக்கவர் இல்லை. எழுத்தாளராக இருந்தவர். கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக சிறுகதை, கவிதை, விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு தமிழ் வளர்த்த இங்கிலீஷ் மொழி பேராசிரியர் என்பது தான் கவனிக்க வேண்டிய விஷயம்.

சிறுகதை, கவிதைகள் பல எழுதி இருந்தாலும் ஒரு விமர்சகராகவே அவரது சாதனை ஓங்கி நிற்கும். அவர் எழுதி இருக்கும் கட்டுரைகள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. ஆழ்வார்கள் முதல் எஸ்ரா பவுண்:ட் வரை அவர் ஆராய்ந்து எழுதி இருக்கிறார். மேனாட்டுத் தத்துவங்களையும் பற்றி நிறைய அறிமுகப்படுத்தி இருக்கிறார். 1962-ம் ஆண்டு எழுத்து ஏடுகளில் அவர் மேல்நாட்டு கவிகளான எலியட், பவுண்:ட், ஏட்ஸ், ஆ:டன், வாலரி, ரீ:ட், ஸ்பெண்:டர், மெல்லர்மி, ஹவுஸ்மன், ஏ. இ., சி. டே. லூவிஸ் ஆகியோரது இலக்கியத் தத்துவங்களை ஆராய்ந்து ஒரு தொடர் கட்டுரை எழுதினார். அவை வாசகர்களால் பாராட்டப்பட்டன. இன்றும் மேல்நாட்டு விமர்சனப் பார்வைகளையும் விமர்சகர்களையும் பற்றி எழுத்துவில் எழுத திட்டமிட்டிருந்தார். ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளாகவே அவர் உடல் நிலை சீர்கெட்டுப் போயிருந்தது. அதனால் அது நடக்காமல் போய்விட்டது.

ரா. ஸ்ரீ. தேசிகன் ஒரு துணிச்சல்காரர். மனதில் பட்டதை வெளிச் சொல்பவர். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை எழுத்தாளர் சங்க மகாநாட்டில் தமிழ் உரை நடை பற்றி பேசுகையில் மறைமலையடிகளின் நடை பற்றி அபிப்ராயம் சொன்னதன் விளைவாக ஏற்பட்ட விவகாரம் வாசகர்களுக்கு நினைவு இருக்கும். பாரதி, புதுமைப்பித்தன் இவர்களைப் பற்றியும் குறை சுட்டிக் காட்டி இருக்கிறார். இவ்வளவுக்கும் 1940-ல் வெளியான 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற நூலுக்கு ஒரு நல்ல முகவுரை எழுதியவர் அவர். புதுக் கவிதையை அவர் ஏற்காதவர். வன்மையாக கண்டித்திருக்கிறார். அவரது இலக்கிய கருத்துக்களை நாம் ஏற்கிறோமோ இல்லையோ, அவருக்கு ஒரு திட்டவட்டமான பார்வையும் கருத்தும் இருந்ததை நாம் பொருட்படுத்தியாக வேண்டும். அவருக்கு ஆக்க விமர்சனத்தில் தான் நம்பிக்கை. அவருடைய கட்டுரைகள் இதை நிரூபிக்கும். தமிழ் இலக்கியம் ஒரு நல்ல இலக்கிய அறிவாளியை, விமர்சகரை இன்று இழந்து விட்டது. இது நஷ்டம்.

எழுத்திலே கடுமையாக இருக்கும் தேசிகன் மெதுவான குரல் வாய்ந்தவர்; அபிமானத்தோடு பழகுபவர். அவர் அறைக்குள் போகும்போது நூற்றுக் கணக்கான புத்தகங்கள் பக்கங்கள் பிரிக்கப்பட்டு தாறுமாறாக சிதறி இருப்பதைத்தான் எப்போதும் பார்க்க முடியும். சதா படிப்பு, படிப்பு, படிப்பு. ஒரு இங்கிலீஷ் பேராசிரியர் தமிழில் அவ்வளவு ஈடுபட்டிருந்தார். ரா. ஸ்ரீ. தேசிகன் தமிழ் இலக்கிய உலகில் என்றைக்கும் விமர்சகராக நினைவில் வைக்கப்பட வேண்டியவர். அவருடைய கைப்பிரதிகள் ஏராளம். அவை புத்தகங்களாக வெளிவந்தாக வேண்டும்.

எழுத்துவிடம் அவருக்கு அபிமானம் உண்டு. இந்த அபிமானத்துக்கு நியாயம் உண்டு. எழுத்து ஆசிரியர் அவரது மாணவன். தன் மாணவன் செய்து வரும் ஒரு கடும் முயற்சிக்கு ஆதரவு தன்னால் முடிந்த அளவுக்கு செய்து வந்தார். 'எழுத்து'வின் போக்கை அவர் முழுக்க ஏற்றுக் கொள்பவர்

என்று சொல்ல முடியாது. நேரிலேயே அதைப் பற்றி விவாதிப்பார். விவாதிக்கும்போது புண் படுத்தாமல், பேசுவார். 'எழுத்து' வோடு இலக்கிய உறவும் எழுத்து ஆசிரியருடன் தனி உறவும் கொண்டு இருந்த அவரது மரணம் எழுத்துக்கு நஷ்டம். ஒரு இலக்கிய விமர்சகனுக்கு, படைப்பாளிக்கு, தன் ஆசிரியனது ஆசிரியருக்கு தன் அஞ்சலியை செலுத்திக் கொள்கிறது எழுத்து.

தமிழ் எழுத்தாளர் சங்க செயற்குழு

இந்த ஆண்டுக்கு தலைவராக இருக்கும் அகிலன் தலைமையில் சென்ற மாதம் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் சங்கச் செயற் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அரசியல் பொதுத் தேர்தல் காற்று அங்கும் பலமாக பாதித்தது. எல்லா பதவிகளுக்கும் கடும் போட்டி இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு பின் வருமாறு :

உப தலைவர்கள் : அழ. வள்ளியப்பா, எம். எஸ் கமலா, கு. அழகிரிசாமி, மயிலை சீனி வெங்கடசாமி.

செயலாளர் : கே பக்தவத்சலம் கோவி மணிசேகரன்.

பொருளாளர் : கண முத்தையா.

செயற்குழு : நா. பார்த்தசாரதி, ஜயா அருணசலம் பூவண்ணன், ஊ. ஜயராமன், கோமதிசுவாமிநாதன். அப்துல் வஹாப், ஜடாதரன், அவ்வை நடராஜன், சி பாலசுப்ரமண்யன், தம்பி சீனிவாசன், குயிலி, சி சு. செல்லப்பா, க. நமசிவாயம்.

நான்கு உபதலைவர் பதவிக்கு ஏழு பேரும், ஒரு செயலாளர் பதவிக்கு மூன்று பேரும், இரண்டு துணைச் செயலாளர் பதவிக்கு நான்கு பேர்களும், ஒரு பொருளாளர் பதவிக்கு இருவரும், பதிமூன்று செயற்குழு உறுப்பினர்களுக்கு இருபத்தெட்டுப் பேரும் போட்டியிட்டார்கள். ரசமான தேர்தலாக இருந்தது. எழுத்தாளன் தனி மனித பெருமை கொண்டவன் ஆனாலும் கூட்டாக செயல்பட முனைகிறபோது எவ்வளவு உற்சாகம், வேகம், விருப்பு வெறுப்பு கொள்கிறான் என்பது இம்மாதிரியான ஸ்தாபன முயற்சிகளில் நன்றாகத் தெரிகிறது. ஓட்டுப் பிடிப்பதற்கு அவன் அரசியல்வாதியையும் மிஞ்சி விடுகிறான் ! இதனால் தான் தேர்தல் ரஸமாக இருந்தது என்கிறோம்.

கோஷ்டியாக கட்சி கட்டும் மனப்பான்மை அறிகுறிகள் ஆரம்பத்தில் தென்பட்டன. ஆனால் இப்போதைய அரசியல் பிரமிப்பு விளைவுகள் போலவே முடிவுகள் இருந்தன. கோஷ்டியாக முளைத்தவர்கள் அவரவர் அளவுக்கு வெற்றி தோல்வி இரண்டையும் கண்டார்கள். கோஷ்டியாக சேராதவர்களும் எதிர்பாராதவிதமான வெற்றி தோல்விகளை பெற்றார்கள். போட்டி எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். முடிவு சரியாக வந்திருக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில் இருந்ததைவிட இந்த ஆண்டு செயற்குழு அதிக பிரதிநிதித்வம் வாய்த்ததாக இருக்கிறது. வரவேற்கத் தக்க விஷயம். சங்கம் இந்த ஆண்டு திறம்பட செயல்பட இது உதவும் என்று எதிர் பார்க்கிறோம். தமிழ் எழுத்தாளர் சங்கம் வேகமாக வளர வேண்டும். ஆமை வேகம் போதாது. இந்த ஆண்டாவது தங்களுக்கென ஒரு கட்டிடத்துக்கும் வழி செய்து கொள்ள வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றை சொல்ல வேண்டி இருக்கிறது. செயற்குழுவை தேர்ந்தெடுப்பதில் சென்னை நகர உறுப்பினர்கள் மட்டுமே பங்கு கொள்ள முடிகிறது. நூற்றுக்கணக்கான வெளியூர்க்காரர்கள் உரிமை உபயோகிக்க முடியவில்லை. அதுக்காக சில ஸ்தாபனங்கள் ஒதுக்கலாம். நியமனம் சரியில்லை. தேர்தல் மூலம் இருக்க வேண்டும். இன்னொரு விஷயம். சென்னையில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் வர வேண்டும். பெரும்பாலோர் வருவதேயில்லை. பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு தொகை ஏறி இருப்பதைப் பார்த்த பிறகாவது இனி உறுப்பினர்கள் தவறாமல் வந்து கலந்து கொள்ள வேண்டும். சங்கம் வளர இது அவசியம். இல்லாவிட்டால் சிறு குழுக்கள் தான் என்றைக்கும். இருந்து வளர்ச்சி தேங்கிப் போகும்.

தமிழ்ப்பணி செய்யும் ஏ. கே. ராமானுஜம்

எழுத்து வாசகர்களுக்கு நாம் ஒருவரை அறிமுகப்படுத்த விரும்புகிறோம். அவர் ஏ. கே. ராமானுஜம் அவர் மைசூர்க்காரர், தாய்மொழி கன்னடம். ஆனாலும் அவர் தமிழர் என்றே சொல்ல வேண்டும். தமிழ் இலக்கியங்களுடன் பரிச்சயம் கொண்டுள்ள அவர் சங்க இலக்கியங்களின் சிறப்பை கணித்திருக்கிறார்.

இது ஒரு புறம் இருக்க அவரே ஒரு கவி. இங்கிலீஷில் எழுதுபவர். 'தி ஸ்டிரைடர்ஸ்' என்ற அவரது இங்கிலீஷ் கவிதைத் தொகுப்பு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. பெறுவதற்கு அரிதான 'பொயட்ரி :புக் சொஸைடி' சிபார்சையும் அது பெற்றிருக்கிறது.

அமெரிக்காவில் சிகாகோ சர்வகலாசாலையில் மொழி இயல் பேராசிரியராக பதவி வகிக்கும் அவர் தற்போது சென்னையில் இருக்கிறார். எழுத்து முயற்சிகளை பாராட்டும் அவர், தமிழில் புதிய முயற்சிகளை மேலும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். சமீபத்தில் அவர் தன் கவிதைகளை சென்னை பிரிட்டிஷ் கவுன்சில் சார்பு கூட்டத்தில் அழகாக படித்தார். ராமானுஜத்தின் தமிழ்ப் பணிக்கு நம் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்வதுடன் அவருடன் இன்றும் நெருங்கிக் கொள்ள விரும்புகிறோம்.

டெல்லி கடிதம்

யூகோஸ்லாவிய நாவலாசிரியை

க்ராஸ்தானு ஒலுஜிச்

இல்லி சாகித்ய அகாடமி, இவ்வருட ஆரம்பத்திலிருந்து இலக்கிய மேடை (Literary Forum) ஒன்றைத் தொடங்கியுள்ளது. இந்தியாவின் பல மொழிப் பகுதிகளிலிருந்தும், உலகத்தின் மற்ற நாடுகளிலிருந்தும் தில்லிக்கு வரும் இலக்கிய ஆசிரியர்கள், தில்லியிலிருக்கும் இலக்கிய ஆசிரியர்கள், ரசிகர்களுடன், பொதுக் கூட்ட பேச்சு முறையில் அல்லாமல், அளவளாவல் பாணியில் சந்திக்கும் வாய்ப்பாக இது ஏற்பட்டுள்ளது. ஆயினும், அழைக்கப்படும் இலக்கிய பிரமுகர்களுக்கு ஏதாகிலும் ஒரு தலைப்பு பேச்சு—அளவளாவலுக்கு வழிகாலாகக் கொடுக்கப்படுகிறது. இதன் முதல் கூட்டம் ஜனவரி மாத ஆரம்பத்தில், க. நா. சுப்ரமண்யத்தின் "சில பழைய தமிழ் இலக்கியங்களில் ஒரு புதிய பார்வை" என்ற பேச்சுடன் ஆரம்பித்தது.

'இதற்கு அடுத்த கூட்டத்தில் (Grozdana Olujic) க்ராஸ்தானு ஒலுஜிச் என்ற யூகோஸ்லாவிய நாவலாசிரியை 'இன்றைய யூகோஸ்லாவிய இலக்கியம்' என்பது பற்றிப் பேசினார். க்ராஸ்தானு ஒலுஜிச் வயதில் மிகவும் சிறியவர். யூகோஸ்லாவியாவின் செர்பியா பகுதியைச் சேர்ந்தவர். ஆங்கில, பிரெஞ்சு, உலக இலக்கியங்களில் பட்டம் பெற்றவர். இதுவரை நிறைய சிறுகதைகளும், நான்கு நாவல்களும் ஒரு கட்டுரை நூலும் எழுதியிருக்கிறார். 1957-ல், தனது இருபத்து மூன்றாவது வயதில் இவர் எழுதிய 'ஆகாயத்தில் ஒரு உல்லாசப் பிரயாணம்' (An Ecxursion to the Sky) என்ற முதல் நாவல் உலகத்துப் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, நாடகமாகவும், திரைப்படமாகவும் புகழ் பெற்றது.

இரண்டாம் உலக யுத்தத்தில் யூகோஸ்லாவியாவின் நகரங்கள், கிராமங்கள் எல்லாமே உருத் தெரியாது சிதில மடைந்தன. பலவிடங்களில் முழுக் கிராமங்களும் நகரங்களுமே பெருங்கல்லறைகளாக மாறின நாட்டின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் போரில் உயிரிழந்தனர். நம்மைப் போலல்லாமல், ஐரோப்பாவின் மற்ற நாட்டினரைப் போல், இரண்டாம் உலகப் போர் யூகோஸ்லாவியருக்கு, ஒரு சரித்திரபாடமாகவோ, ரேடியோவில் பத்திரிகைகளில் படிக்கும் நிகழ்ச்சியாகவோ, வெறும் கடந்த கால கர்ண பரம்பரைச் செய்தி ஞாபகமாகவோ இல்லை. அவர்கள் வாழ்ந்த, அநுபவித்துத் துன்புற்று வரும் உண்மை. ஒவ்வொரு குடும்பத்தையும் பாதித்த அவல நடப்பு. அதனால், நம்மைப் போன்று பெரும்பாலும் அமைதியான வாழ்க்கை நடத்தி வருபவர்கள் கொண்டுள்ள போகப் பொருளான நீதி முறைகளும், அறப் பார்வைகளும் அவர்களிடையே அர்த்தமற்றுப் போய் விட்டன. 'நான் மட்டுமல்ல, என் சுற்றத்தார் மட்டுமல்ல, என் ஊரார் மட்டுமல்ல, நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் அடுத்த நிமிட வாழ்வு நிச்சயமில்லை என்ற நிலை, தான் வருவித்துக் கொள்ளாத ஏதோ உலகத்தில் மற்றொரு பகுதியில் விளையும் காரணமற்ற அநீதியான சம்பவங்களால் ஏற்படுமாயின் அங்கு நீதி வழுவிய நெறி முறை வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை' என்றார்.

கலாசாலையில் படிக்கும் மிஞ்சா (Minja) நாம் கொண்டுள்ள நெறிமுறைகளுக்குக் கட்டுப்படாத சுதந்திர "வாழ்க்கை வாழ்பவள். ஏன் அப்படி என்று புருவத்தைத் தூக்கலாம். ஏன் கூடாது என்பதற்கு ஏதும் தகுந்த காரணம் இருப்பதாக அவளுக்குப் புலப்படவில்லை. உலக யுத்தம் நடந்த சமயம், யூகோஸ்லாவியா ஜெர்மனியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சமயம் அவளும் அவளுடைய சகாக்களும் குழந்தைகள். போரின் கோர ஞாபகங்களே அவளுக்கும் அவள் சகாக்களுக்கும் நினைவுகளும் கனவுகளும், இன்று இப்போது இந்நிமிடத்தில் வாழும் வாழ்க்கைதான் நிச்சயமானது, உண்மை என்ற நிலையில் அதைத் தனக்குப் பிரீதியான சுதந்திரமான முறையில் வாழ்ந்து விடுவதில் தான் அர்த்த மிருப்பதாக அவருக்குத் தோன்றியது புரிந்து கொள்ளக் கூடியதுதான். இத்தகைய நிச்சயமற்ற, வேரற்ற வாழ்க்கையில் நெனத் (Nenad) என்னும் வைத்திய மாணவன் எதிர்ப்படுகிறான். அவளுடன் கழித்த நாட்களில், அவள் கர்ப்பமடைகிறாள். நெனத் மிஞ்சாவைப் போல் அவநம்பிக்கைக்கு தன்னை இரையாக்கிக் கொண்டவனல்ல. ஏதோ ஒரு 'நாளை' உண்டு என்று எண்ணி அதை எதிர் நோக்கியிருப்பவன். அவளுடன் ஏற்பட்ட நட்புறவில் குஞ்சாவுக்கும் வாழ்க்கைக்கு ஏதோ ஒரு அர்த்தம், அதன் நிச்சயமற்ற நிலையிலும் இருக்கத் தான் செய்கிறது என்று தோன்றுகிறது. ஆனால், அவ்வுறவு வெகு நாட்கள் நீடிக்கவில்லை. அவல முடிவிலும், கனவாகி விட்ட, தரையில் வேரூன்றாத, ஆகாயத்தை நோக்கிய !ஒரு உல்லாசப் பயணமாக அது ஆகி

விட்ட போதிலும், தான் இரையாகி அவதிப்படும் அலமோதல்களுக்கு அப்பால் ஓர் அமைதியான நிலை, ஓர் எதிர்க்கரை உண்டு, அதைப் பார்க்கத்தான் வேண்டும் என்ற உறுதி அவனுக்கு ஏற்படுகிறது.

இதுதான் ஆகாயத்தை நோக்கி ஒரு உல்லாசப் பயணம். அல்பேர் காமுவைப் போல், யூகோஸ்லாவிய மக்களின் இன்றைய அபிலாஷைகள், நம்பிக்கைகள், ஏமாற்றங்கள் அவதிகள்—எல்லாமே உலக யுத்தத்தின் விளைவுகள்—இவற்றை கிராஸ்தாஜுவின் நாவல் பிரதி பலிக்கிறது.

இவரது அடுத்த நாவலான உறங்கும் நாய்கள் படுத்துக் கிடக்கட்டும் (Let Sleeping dogs Lie)—சூழ்நிலைகள் தன் மேல் விதித்திருக்கும் சட்டங்களையும் விதிமுறைகளையும் எதிர்த்து சுதந்திரத்தை நாடும் ஒருவனைப் பற்றியது. இந் நாவலின் பாத்திரங்கள் எல்லோருமே அன்றாட வாழ்க்கையின் இருமையைக் கண்டு, அதிருப்தியுற்று பொறுமையிழந்து சுதந்திரக் கனவு காண்பவர்கள். இதற்கு அடுத்து அன்பிற்கு எனது ஓட்டு (I vote for love), காட்டு விளைச்சல் (wild seed) என்ற இரண்டு நாவல்களும் அவர் எழுதியுள்ளார்.

க்ராஸதாஜு ஓலுஜிச்சின் நாவல்கள் எல்லாமே அவர் வாழும் இன்றைய தலைமுறையை பற்றியவை. இவர் எழுத்துக்கள் (classical realist) முறையில் அமைந்தவை. அதாவது சோதனை எழுத்துக்களுக்கு மாறாக மரபு வழி வந்துள்ள எளிய யதார்த்தப் பாங்கில் அமைந்தவை. இவ்வளவில் இவர், யூகோஸ்லாவியாவின் உலகப் பிரசித்தி பெற்ற, நோபல் பரிசு பெற்ற ஐவான் ஆண்டிரிச் (Ivan Andric) மரபில் வருகிறவர்.

சாகித்ய அகாடமி பேச்சில், யூகோஸ்லாவிய இன்றைய இலக்கியத்தில் பொதுவாக இரண்டு வகை எழுத்துக்கள்—அதாவது சோதனை எழுத்தும், மரபான, எளிய யதார்த்த எழுத்தும் உண்டு என்றார். பின்னதுதான் அதிகப் பிரபல்யமானதும், விரும்பப்படுவதும், எத்தகைய எழுத்தும் குறியீட்டு தொனியிலேயே (symbolic vein) எழுதப்படுகிறது. ஐவான் ஆண்டரிச் போரைப் பற்றியே எழுதினாலும், அவரும் போர் ஒரு குறியீடாகவே கொள்ளப்படுகிறது. பெரும்பாலும் யூகோஸ்லாவியாவில், தமிழ் நாட்டையும் இந்திய மற்றப் பகுதியையும் போலல்லாது, கவிஞர்கள் யாரும் இயற்கையைப் பற்றி எழுதுவதில்லை. அந் நாட்டு எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கவர்வது பாதிப்பது, அன்றாட வாழ்வும், மனிதர்களுமே. இயற்கையைப் பற்றி கவிதை எழுதுகிறவர்களும் ஒரு சிலர் இருந்த போதிலும் அவ்வியற்கைப் பொருட்களும், அவர்களின் கவிதைகளிலும் எழுத்துக்களிலும் குறியீட்டுப் பொருட்களாகவே, வாழ்வையும், மனிதனையும் குறிப்பனவாகவே ஆகிவிடுகின்றன. உதாரணமாக புற்களின் மென்மையை, சீக்கிரம் அழிபட்டு மறையும் நிலையை இன்றைய மனிதனின் வாழ்க்கை நிலையின்மைகளுக்கு குறியீடாகவே காண்கிறான். அதே போல கற்களைப்பற்றி எழுதிய ஒரு கவி, கற்கள் அறைபட்டு உருவிழந்து சிதிலமாகும் நிலையில், அரசாங்கத்துக்கும், ஸ்டாலினின் கொடுங்கோன்மைக்கும் அராஜகத்துக்கும் பலியாகும் மனிதனின் பரிதவிப்பையே காண்கிறான்.

அன்று ஓலுஞ்ச் கூறிய இன்னொரு விஷயமும் மிக சுவாரஸ்யமாக இருந்தது. யூகோஸ்லாவியாவின் வட பகுதியான செர்பியா (Serbia) வில் தான் ஒரு இலக்கிய பாரம்பரியம் உண்டு. தென் பகுதியான மாசிடோனியாவில் மொழியின் வரலாற்றை கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கு பின் நோக்க முடியும் என்றாலும் 1953-ல் தான் முதல் வசன நூல் தோன்றியது என்றாலும், அதன் பின் இன்றுவரை, 13 வருட காலங்களில் தோன்றிய வசன இலக்கிய நூல்கள் சில உலகத்தின் எந்த இலக்கியத்துக்கும் பின் தங்கியதல்ல என்று அபிப்ராயப்படுகிறார் மேலும் யூகோஸ்லாவிய இலக்கியத்தில் கிராமியக் கதைகள் பாடல்கள் இவற்றின் செழுமை மிக வளமானது என்றும், இன்றைய இலக்கியத்திலும் அவற்றின் பாதிப்பு பெரும் அளவு உண்டு என்றும் கூறினார்.

யூகோஸ்லாவியா ஒரு கம்யூனிஸ ஆதிக்கத்தில் உள்ள நாடு என்ற போதிலும், இதுவரை கம்யூனிஸ நாடுகளில் கட்சி நோக்கில் இலக்கியக் கட்டுப்பாடுகள் உண்டு என்பது வரலாற்று உண்மை ரஷ்யாவிலும், சைனாவிலும், இன்னும் சில கம்யூனிஸ நாடுகளிலும் இன்றும் இது நிதர்சன உண்மை என்ற போதிலும், யூகோஸ்லாவியாவில், இலக்கியத்தைப் பொறுத்தவரை மட்டிலும் யாரும் எதையும் எழுதிப் பிரசுரிக்க சுதந்திரம் உண்டு என்றும் அவர் சொன்னதிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல. ஏதாகிலும் ஒரு இலக்கியப் படைப்பு சிறந்த படைப்பு, ஆனால் பொது மக்களிடம் வரவேற்பு இராது, பிரசுரிப்பதில் நஷ்டம் ஏற்படும் என்று தோன்றினால், பிரசுரகர்த்தர்களோ, எழுத்தாளனோ அரசாங்கத்தை அணுகினால் அரசாங்கமே அதைப் பிரசுரிக்க வழிசெய்கிறது என்றும் அவர் கூறினார். சுதந்திர ஜனநாயகமான நம் தமிழ் நாட்டில், ஜனநாயக சுதந்திரத்திற்கு அர்த்தம், நடப்பு உண்மை வேறு.

'தெஹல்வி'

இரு தொழில்

சி. மணி

குண்டு விதையல்ல.
விதைத்ததும் முளைப்பதற்கு.
குண்டை விதையாக்கு
விதைத்ததும் முளைத்துவிடும்.

o

துப்பாக்கி நட்டேன்
தளிர்க்க வில்லை.

o

துப்பாக்கி கொம்பல்ல
நட்டதும் தளிர்ப்பதற்கு.
துப்பாக்கி கொம்பாக்கு
நட்டதும் தளிர்த்து விடும்.

மலையாள கதை

பக்ஷியின் மணம்

மாதவிக் குட்டி

கல்கத்தாவில் வந்து ஒரு வாரம் சென்ற பிறகு தான் அவள் காலைப் பத்திரிகையில் அந்த விளம்பரத்தைப் பார்த்தாள். ''பார்வைக்கு மரியாதையும் புத்தி சாமர்த்தியமும் மிக்க ஒரு யுவதி எங்கள் மொத்த வியாபாரத்தின் இன் சார்ஜ் வேலைக்காக தேவை! துணிகளின் நிறங்களைப்பற்றியும் புதிய டிசைன்களைப் பற்றியும் பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டும் சொந்த கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்துடன் எங்கள் ஆபீஸுக்கு நேரில் வரவேண்டும்.'

ஜனச் சந்தடி அதிகமான ஒரு தெரு வீதியில் இருந்தது அந்த காரியாலயக் கட்டிடம் அவள் இளம் மஞ்சள் நிறத்தில் ஒரு பட்டு சாரி அணிந்தவாறு தன்னுடைய வெளுத்த கைப்பை, முதலியவையோடு அந்த கட்டிடத்தில் சென்று சேர்கையில் மணி பதினொன்றாகி விட்டது. ஏழு மாடிகளும், இரு நூறுக்கும் அதிகமான அறைகளும் ஏராளமான வராந்தாக்களும் உள்ள ஒரு பிரம்மாண்ட கட்டிடம் அது. நாலு லிப்டுகள். ஒவ்வொரு லிப்டின் முன்னாலும் ஒவ்வொரு ஜனத்திரள் இருந்தது—கொழுத்த வியாபாரிகள், தோல்பையை கையிடையில் வைத்துக்கொண்டு நிற்கும் உத்தியோகஸ்தர்கள், இத்யாதி இத்யாதி மனிதர்கள். ஒரு பெண்ணைக்கூட அங்கொன்றும் காணக் கிடைக்கவில்லை. தைரியம் அப்போதே இறங்கிவிட்டது. தன்னுடைய பர்த்தாவின் அபிப்பிராயத்தைப் பாராட்டாது இந்த உத்தியோகத்திற்காக வரவேண்டாமாக இருந்ததென்று அவளுக்குத் தோன்றியது. பக்கத்தில் பார்த்த ஒரு பியூனிடம் அவள் கேட்டாள்:

''டெக்ஸ்டையில் இன்டஸ்டிரீஸ் எந்த மாடியில் இருக்குது ..?''

''முதல் மாடியிலேண்ணு தோணுது...'' என்றான் அவன்.

எல்லாருடைய கண்களும் தன் முகத்தில் வந்து விழுகின்றன என்று அவளுக்குப் பட்டது.

சே, வரவேண்டாமாக இருந்தது. வேர்வையில் முழுகி நிற்கும் இந்த ஆண்களுக்கிடையில் நானும் எதுக்கு வந்து சேர்ந்தோம்? ஆயிரம் ரூபாய் தான் கிடைப்பதாக இருப்பினும் தன்னால் இந்த கட்டிடத்துக்கு நாள் தவறாமல் வேலைக்கு வர முடியாது ..ஆனால், திடீரென்று திரும்பிச் சென்று விடவும் அவளால் இயலவில்லை.

அவள் முறை வந்து...லிப்டில் ஏறினாள். பக்கத்தில் நிற்பவர்களுடைய உடம்பில் ஸ்பரிசிக்காமலிருக்க ஒரு மூலையில் மிக பிரயாசைப்பட்டு ஒதுங்கி நின்றாள்.

முதல் மாடியில் இறங்கியபோது அவள் சுற்றுமுற்றும் கண்ணோட்டமிட்டாள். நான்கு பக்கங்களிலும் நீண்டு கிடந்த வராந்தாவிலிருந்து ஒவ்வொரு அளவுக்கும் பெரிய வாசல்களிருந்தன. வாசல்களுக்கு முன்னால் ஒவ்வொரு போர்டும்!

''ஏற்றுமதியும் இறக்குமதியும்

''வொயின் வியாபாரம்.''

இப்படி பற்பல போர்டுகள். ஆனால் எவ்வளவு நடந்த பின்னரும் எத்தனை வாசல்கள்தான் கடந்த பின்னரும், தான் தேடிவந்த போர்டு அங்கொன்றும் தென்படவில்லை. இதற்கிடையில் அவள் உள்ளங்கைகள் வியர்வையால் நனைந்தன. ஒரு அறையிலிருந்து திடீரென்று வெளியே வந்த ஒருவனிடம் அவள் விசாரித்தாள்:

''டெக்ஸ்டைல் கம்பெனி எங்கே இருக்குது ..?'

அவன் தன்னுடைய சுருங்கிச் சிவந்த விழிகளால் அவளை அடி முதல் முடிவரை பார்வையிட்டான். பிறகு சொன்னான்:

''எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடன் வந்தால் பியூனிடம் விசாரித்து இடத்தை காட்டுகிறேன்...''

உயரம் குறைந்த ஒரு மனிதன் அவன், நடுத்தர பிராயம் இருக்கும். அவனுடைய கை நகங்களில் அழுக்கிருந்தது. அதைக் கண்டதினால் தானோ என்னமோ, அவனுடன் செல்ல அவளுக்குத் தோன்றவில்லை.

அவள் சொன்னாள் :

''நன்றி . நானே விசாரித்துத் தெரிந்து கொள்கிறேன்...''

அவள் துரிதமாக நடந்து ஒரு மூலை திரும்பி இன்னொரு வராந்தாவில் வந்தடைந்தாள். அங்கேயும் அடைக்கப்பட்டிருக்கும் பெரிய கதவுகளை அவள் பார்த்தாள். Dying என்று எழுதப்பட்ட ஒரு போர்டு அங்கே தொங்குகிறது. ஸ்பெல்லிங்கின் தப்பைப் பார்த்து அவளுக்கு சிரிப்பு வந்தது. துணிக்கு சாயம் போடுவதற்கு பதில் இங்கே மரணமா நடைபெறுகிறது ? எப்படியும் போகட்டும், அங்கே கேட்டுப் பார்த்து விடலாமென்று நினைத்து அவள் கதவைத் தள்ளித் திறந்தாள். உள்ளே காலியாகக் கிடந்த ஒரு பெரிய அறையைத்தான் அவள் கண்டாள். இரண்டு மூன்று நாற்காலிகளும், கண்ணாடி பதித்த ஒரு மேஜையும்...அவ்வளவு தான்...அங்கு யாருமே தென்படவில்லை . அவள் உரக்கக் கேட்டாள் :

''இங்கே யாருமில்லையா...?''

உள் அறைக்குச் செல்லும் வாசலின் திரை மெல்ல அசைந்தாடியது...அவ்வளவுதான். அவள் தைரியமாக அறையின் நடுவில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தாள். சிறிது இளைப்பாறுமல் இனி ஒரு அடிகூட நடக்க முடியாதென்று அவளுக்குப் பட்டது.

மேலே மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது. இதென்ன ஆபீஸ்...? அவள் வியந்தாள். வாசலைத் திறந்து வைத்துக் கொண்டு, விசிறியையும் போட்டு விட்டு இங்குள்ளவர்கள் எல்லோரும் எங்கேதான் போய்விட்டார்கள்...!

துணிக்கு சாயம் போடுபவர்கள் ஆதலால் தான் தேடுகிற ஆபீஸ் எங்கேயிருக்கிறதென்று இவர்களுக்குத் தெரியாமலிருக்காது. அவள் கைப்பையைத் திறந்து கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்துக் கொண்டாள். அழகுக்கு ஒரு குறைச்சலுமில்லை...! எண்ணூறு ரூபாய் சம்பளம் வேண்டுமென்று கேட்கலாமா ? தன்னைப் போல ஒரு உத்தியோகஸ்தைக் கிடைப்பது அவர்களுக்கு பாக்கியம் தான்...படிப்புண்டு, பட்டமுண்டு, வெளிநாடுகளில் சஞ்சாரம் செய்து சம்பாதித்த உலக அறிவும் உண்டு.

ஒரு புட்டியின் கார்க் இழுத்துத் திறக்கும் ஓசை கேட்டு திடுக்கிட்டு கண் விழித்தாள் அவள். சை...தான் எவ்வளவு பெரிய முட்டாள்...முன் பின் அறிமுகமில்லாத ஒரு இடத்திலிருந்து தூங்குவதா...? அவள் கண்களை கசக்கிவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அவளுடைய எதிரில் நாற்காலியொன்றில் உட்கார்ந்தவாறு ஒரு வாலிபன் சோடாவோடு கூடவிஸ்கியை விட்டுக் கொண்டிருக்கிறான். அவன் அணிந்திருந்த புஷ் ஷர்ட் வெள்ளைநிற டெர்லினால் தைக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. அவனுடைய கைவிரல்களின் மேல் பாகத்தில் அடர்த்தியாக மயிர்கள் வளர்ந்து நின்றன. பலம் நிரம்பிய அந்த கைவிரல்களைக் கண்டதும் சடக்கென்று ஒரு பயம் அவளிடம் புகுந்து கொண்டது. இந்த சைத்தானின் வீட்டுக்கு எதுக்கு வந்தோம் ..!

அவன் தலை தூக்கி அவளைப் பார்த்தான். அவனுடைய முகம் குதிரையினுடையது போல நீண்டிருந்தது ..அவன் கேட்டான் :

''தூக்கம் சுகமா இருந்ததா...?''

பிறகு, அவளுடைய பதிலைக் கேட்க நிற்காது தம்ளரில் இருந்த பானம் முழுதையும் குடித்துத் தீர்த்தான்.

''தாகிக்கிறதா ...?''

அவன் கேட்டான். இல்லையென்று தலையசைத்தாள் அவள்.

''... ... டெக்ஸ்டைல் கம்பனி எங்கே இருக்குதுன்னு தெரியுமா ! நீங்க துணிகளுக்கு சாயம் போடுபவங்களல்லவா ...உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாமுண்ணு நினைத்தேன் .''

என்று சொல்லிவிட்டு அடக்கமாக புன்முறுவல் பூத்தாள் அவள். அவன் சிரிக்கவில்லை. அவன் மீண்டும் விஸ்கியை தம்ளரில் ஊற்றினான். சோடா கலந்தான். எவ்வளவோ நேரமிருக்கிறது. சம்பாஷணைச் செய்ய, எதுக்கு அவசரம் என்ற ஒரு பாவனை...

அவள் கேட்டாள் :

''உங்களுக்குத் தெரியாதா ...?''

அவள் பொறுமையிழந்து விட்டிருந்தாள். எப்படியாவது அங்கே இருந்து வெளியேறி, வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டால் போதுமென்றாகிவிட்டது அவளுக்கு.

அவன் திடீரென்று நகைத்தான். அவனுடைய உதடுகள் மிக மெல்லியவை...அவை அந்தச் சிரிப்பில் விருபத்தை அளித்தன.

''என்ன அவசரம் ?'' அவன் கேட்டான். ''மணி பதினொண்ணே முக்கால் தானே ஆச்சு ..''

அவள் வாசலுக்கு நடந்தாள்.

'உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாமுண்ணு நான் நினைத்தேன்...' அவள் சொன்னாள். ''ஜவுளி வியாபாரத் தொடர்புள்ள ஒரு ஆள்தானே நீங்களும் ..!'

''என்ன தொடர்பு ..? நாங்க துணிக்கு சாயம் போடுபவங்களல்ல...Dying என்ற போர்டு வாசிக்கல்லையா...?''

''அப்படீன்னா......?''

''அந்த அர்த்தம் தான். சாவது என்று கேள்விப்பட்டிருக்கிறீங்களல்லவா...? சுகமாக

சாவதற்கு வசதி பண்ணிக் கொடுப்போம் நாங்கள்...''

அவன் நாற்காலியில் சாய்ந்து கிடந்து கண் சிமிட்டிவிட்டு அவளை நோக்கிச் சிரித்தான். திடீரென்று அந்த வெளுத்த புன்சிரிப்பு தன்னுடைய விழிகளெங்கணும் வியாபித்தது போன்று அவளுக்குத் தோன்றியது. அவள் கால்கள் நடுங்கின.

அவள் வாசலுக்கு ஓடினாள். ஆனால் வாசலைத் திறக்க அவளுடைய வியர்த்த கைகளால் முடியவில்லை. இதற்குள் அவள் கண்கள் நிறைந்துவிட்டிருந்தன.

''தயவு பண்ணி இதைக் கொஞ்சம் திறந்து தாருங்களேன்.'' அவள் வேண்டினாள். ''எனக்கு வீட்டுக்குப் போகணும் ..என் குழந்தைங்க காத்திருப்பாங்க ..''

தன்னுடைய வார்த்தைகளைக் கேட்டு, கொடுமைச் சிந்தைகளை துறந்துவிட்டு அவன் தனக்கு உதவி பண்ண வருவான் என்று அவள் எதிர்பார்த்தாள்.

''தயவு பண்ணித் திறங்க—''

அவள் மீண்டும் வேண்டினாள். அவன் இன்னும் இன்னும் விஸ்கி குடித்தான். மீண்டும் மீண்டும் அவளை நோக்கி முறுவலித்தான்.

அவள் வாசலைத் தட்டத் தொடங்கினாள்.

''ஐயோ...என்னை வஞ்சிக்கிறாயா...? அவள் உரக்க விளித்துக் கேட்டாள்.'' நான் என்ன குற்றம் தான் செய்து விட்டேன்...''

அவளுடைய விம்மல் சற்று நேரத்தில் நின்றது அவள் க்ஷீணித்துத் தளர்ந்து போய் வாசலையடுத்த வெறும் தரையில் விழுந்தாள்

அவன் எந்த கடுமையுமில்லாத ஒரு மிருதுக் குரலில் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறான். சில சொற்கள் மட்டும் அவள் செவியிலும் விழுந்தன.

''...முன்னொரு குளிர் காலத்தில் என் படுக்கையறையில் ஒரு பக்ஷி வந்து அகப்பட்டுக் கொண்டது. மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் உன் சாரியின் நிறம்தான். அது ஜன்னல் கதவின் கண்ணாடியை உடைக்க சிறகுகளால் மோதியும் ரொம்ப கஷ்டப்பட்டது பிறகு என்ன நேர்ந்தது? அது களைத்துப் போய் கீழே விழுந்தது. பூட்ஸ் அணிந்திருந்த காலினால் அதை நான் மிதித்துத் தேய்த்து விட்டேன் ..''

சில நிமிஷ மௌனத்திற்குப் பின் அவன் கேட்டான்: மரணத்தின் மணம் என்னவென்று உனக்குத் தெரியுமா ?''

அவள் கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தாள். ஆனால் எதையும் சொல்ல நாக்கு எழவில்லை. பதில் சொல்ல இல்லாததால் அல்ல. மரணத்தின் மணம், இல்லை பலவித மணங்களை தன்னைப் போல யாருக்குத் தெரியும்? புரையோடிய புண்களின் மணம், பழத் தோட்டங்களின் மதுரமான மணம், ஊதுவத்திகளின் மணம்... இருள் மண்டிக் கிடக்கும் ஒரு சின்ன அறையில், வெறும் தரையில் விரித்திருக்கும் படுக்கையில் கிடந்தவாறு அவளுடைய அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்:

''என்னால் தாங்க முடிய மாட்டேங்குது மகளே ..வலியொண்ணும் இல்லை ..ஆனாலும் தாங்க முடிய மாட்டேங்குது ..''

அம்மாவின் காலில் இருந்த புண்களில் வெளுத்துப்—பருத்த புழுக்கள் துடித்துக் கொண்டிருந்தன.

அப்படியிருந்தும் அம்மா சொன்னாள்:

''வலியில்லை ..''

பின் அப்பா. சர்க்கரை வியாதிஸ்தரான அப்பா திடீரென்று மூர்ச்சையானபோது அந்த அறையில் பழத் தோட்டங்களிலிருந்து வீசும் ஒரு காற்று வந்து சேர்ந்ததாக அவளுக்குத் தோன்றியது அந்த அறையில் பரந்த மணம் அத்தனைக்கு மதுரமாயிருந்தது. அதுவும் மரணம் தான்.

அதையெல்லாம் சொல்ல வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் நாக்கின் சக்தி நசித்துப் போய் விட்டிருந்தது.

அறையின் நடுவில் இருக்கும் வாலிபன் அப்போதும் ஒவ்வொன்றுக்ச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'' ..உனக்குத் தெரியாது இல்லையா ..அப்படியானால் சொல்லித் தருகிறேன்...பக்ஷித்தூவல்களின் மணம் தான் மரணத்துக்கு—அது உனக்குத் தெரிய வேண்டிவரும்...சற்று நேரத்தில். இப்போதே வேணுமா? உனக்கு ரொம்பவும் பிரிய

பண்பு ஒன்றே

வல்லிக்கண்ணன்

விளக்கைப் போட்டேன்
கொசுக்கள் ஆய்ந்தன.
இனிப்பைக் கொட்டினேன்
ஈக்கள் மொய்த்தன.
மிட்டாய் நீட்டினேன்
குழந்தைகள் சூழ்ந்தன.
புல்லைச் சிதறினேன்
ஆடுகள் சேர்ந்தன.
பணத்தைக் காட்டிடில்
மக்கள் கூடுவர்!
பார்க்கப் போனால்,
பண்பு ஒன்றே!
பண்பு ஒன்றே!!

மான பொழுது எப்போது? நேர்மீதிருந்து பார்க்கும் சூரியனின் கீழே லஜ்ஜையின்றி இவ்வுலகம் நிர்வாணமாக கிடக்கும் சமயமா? இல்லை ..அந்திப் பொழுதா?...நீ எப்படிப்பட்ட பெண்? தைரியமுள்ளவளா...? தைரியமில்லாதவளா.?''

அவன் நாற்காலியில் இருந்து எழுந்து அவள் பக்கத்தில் வந்தான். அவன் நல்ல உயரம்... அவள் சொன்னாள்:

''என்னைப் போக விடுங்கள்...நான் இங்கே வரணும்னு ஒரு போதும் நினைத்ததேயில்லை .....''

''நீ பொய் சொல்கிறாய். இங்கே வந்து சேரணுமுன்னு நீ எத்தனையோ தடவை நினைத்திருக்கிறே! மிகவும் சுகமான ஒரு முடிவுக்கு நீ எத்தனை தடவை ஆசைப்பட்டிருக்கிறே! மிருதுத்தன்மை கொண்ட திரை மாலைகள் திரள பெரிசாய் மூச்சுவிடும் கடலில் போய் விழுவதற்கு அனுயாசமாய் சென்று ஒன்று கலக்க மோகிக்கும் நதியைப்போலல்லவா நீ? சொல்லு கண்ணே...அந்த முடிவேயில்லாத சீராட்டுதலை அனுபவிக்க நீ மோகிக்கவேயில்லையா...?'

''நீங்கள் யார்...?''

அவள் எழுந்து உட்கார்ந்தாள். அவனுடைய கை விரல்களுக்கு பயங்கரமான ஒரு கவர்ச்சியிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

''என்னைப் பார்த்ததில்லையா...?''

''இல்லை...''

''நான் உன்னுடைய பக்கத்தில் பலபோதும் வந்திருக்கிறேன். ஒரு தடவை, நீ வெறும் பதிணொண்ணு வயசான சிறுமியாக இருக்கையில் மஞ்சள் காமாலை நோய் வாய்ப்பட்டு, படுக்கையிலிருந்து தலைதூக்க முடியாது நீ படுத்திருந்த காலம்...அன்று உன் அம்மா ஜன்னல் கதவைத் திறந்தபோது நீ சொன்னாய்: 'அம்மா...எனக்கு மஞ்சள் பூக்கள் தெரியுது. மஞ்சள் நிற அரளிப் பூக்கள் எல்லா இடத்திலும் மஞ்சள் பூக்கள் தான்...' அது உனக்கு ஞாபகமிருக்குதா...?''

அவள் தலையசைத்து ஒப்புக் கொண்டாள்.

''உன் கண்களுக்கு மட்டும் தெரிந்த அந்த மஞ்சள் பூக்களின் இடையில் நான் நின்றிருந்தேன் நீ போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு உன் கையைப் பிடிச்சு கூட்டிக் கொண்டுபோய் உன்னைச் சேர்ப்பிக்க. ஆனால் அன்னைக்கு நீ வரவில்லை. என் அன்பைப்பற்றி நீ தெரிஞ்சிருக்கவில்லை...உன்னுடையவும், எல்லோருடையவும் வழிகாட்டி நான் தான் என்று நீ அறிந்திருக்கவில்லை...''

''அன்பா...இது அன்பா...?'' அவள் கேட்டாள்.

''ஆமாம்...அன்பின் பூரணத்தன்மையைக் காட்டித்தர என்னால் மட்டும் தான் முடியும். ஒவ்வொன்றாக நீ எனக்கு காணிக்கைச் செலுத்துவாய்...செக்கச் சிவந்த அதரங்கள், புரளும் விழிகள், அவயவ சௌந்தரியம் கொண்ட உடல். எல்லாம்...எல்லாம், உன் ஒவ்வொரு ரோமக் கால்களை கூட நீ எனக்கு காணிக்கையாய் செலுத்துவாய். ஒன்றுமே உன்னுடைய தல்லாமல் ஆகிவிடும். பிறகு இந்த பலிக்கு பிரதிபலனாக உனக்கு நான் சுதந்திரம் வழங்குவேன்...நீ ஒன்று மல்லாது ஆவாய். ஆனால், எல்லாமாகி விடுவாய்.., கடலின் இரைச்சலில் நீ இருப்பாய்! மழைக் காலத்தில் முளைவிட்டு வளரும் பழையமரங்களிலும் நீ அசைந்து கொண்டிருக்கலாம்; பிரசவ வேதனை அனுபவிக்கும் வித்துக்கள் மண்ணின் அடியில் கிடந்து விம்மும்போது, உன் அழகையும் அந்த விம்மலின்கூட எழும்பி எதிரொலிக்கும். நீ காற்றாவாய்; மழைத்துளிகள் ஆவாய்; நீ மண்ணின் துகள்கள் ஆவாய்—இந்த உலகின் சௌந்தரியமே நீயாகி விடுவாய் ..!''

அவள் எழுந்து நின்றாள். தன்னுடைய களைப்பு முழுதும் விலகிவிட்டதாக அவளுக்குப் பட்டது. புதுசாக கிடைத்த தைரியத்தோடு அவள் மொழிந்தாள்:

''இதெல்லாம் சரியாக இருக்கலாம்..ஆனால் உங்களுக்கு ஆள் மாறிவிட்டது..சாவதற்கு எனக்கு இன்னும் நேரமாகவில்லை...எனக்கு இருபத்தியேழு வயசுதான் ஆச்சு..., நான் கல்யாணமானவள். ஒரு தாய்...எனக்கு காலம்வரவில்லை. நான் ஒரு வேலைக்காகத்தான் வந்தேன்..இப்போ மணி பனிரண்டரை ஆயிருக்கும்...நான் வீட்டுக்கு. நான் வீட்டுக்கு திரும்பட்டும்...!''

அவன் ஒன்றும் சொல்லவில்லை. வாசல் கதவை திறந்து வெளியேச் செல்ல அனுமதி கொடுத்தான். அவள் அவசர அவசரமாக லிப்டைத் தேடி அங்கு மிங்கும் விரைந்து நடந்தாள். தன்னுடைய காலடியோசை அங்கெல்லாம் பயங்கரமாய் முழங்குவதாக அவளுக்குத் தோன்றியது.

லிப்டின் பக்கத்தில் சென்றதும் அவள் நின்றாள். அதைச் செலுத்தும் பியூனை அங்கே காணவில்லை. ஆனாலும் அவள் அதனுள் நுழைந்து கதவை அடைத்துவிட்டு ஸ்விட்சைப் போட்டாள். ஒரு பேரதிர்ச்சியின் ஆரம்ப ஒலிகளோடு அது சடக்கென்று உயர்ந்தது. தான் ஆகாயத்தில் என்றும், இடி முழங்குவதாகவும் அவளுக்குத் தோன்றியது. அப்போதுதான் அந்த லிப்டின் உள்ளே தொங்கவிடப்பட்டிருந்த போர்டு தற்செயலாக அவள் கண்ணில் பட்டது.

''லிப்டு பழுதடைந்திருக்கிறது...அபாயம்...'

பின் எங்கெங்கும் இருள் மட்டும்தான்...சப்திக்கும் கர்ஜிக்கும் ஒரு இருள்...

அதிலிருந்து பிறகு ஒரு போதும் வெளியே செல்ல வேண்டியே வரவில்லை அவளுக்கு.

மொழி பெயர்ப்பு:

நீல பத்மனாபன்

புதுக் - கவிதை உருவ ஆய்வு—I

சி. கனகசபாபதி

வசன வளர்ச்சியுகம் நமது இருபதாம் நூற்றுண்டு. வசனம் இருபதாம் நூற்றுண்டில், பேர்ன பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் கிளர்ந்து எழுந்த நிலையிலிருந்து வளர்ச்சி கண்டு வருவதற்குக் காரணங்கள் அச்சுப் பொறி இயக்கம், ஐரோப்பியச் சார்பு, தேசிய வேகம் மக்கள் வாழ்க்கையில், மறுமலர்ச்சி, பத்திரிகைப் பெருக்கம் முதலியவை. வசனத்தின் இப்படிப்பட்ட வளர்ச்சிப் போக்கினுல் கவிதை பாதிக்கப்பட்டது. முன்னெல்லாம் கவிதையானது பல கால கட்டங்களில் அவ்வப்போது கட்டிடக் கலையையும், சிற்பக் கலையையும், இசைக் கலையையும் சார்ந்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் கவிதை என்று மட்டும் எடுத்துக் கொண்டால் அது இசைக்கலையுடன் ரொம்ப சார்பு பெற்றது. காரணம் பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான் தமிழிசை இயக்கம் புத்துயிர்த்தது. இந்த இருபதாம் நூற்றுண்டில் வசனத்துக்கு உபயோகம், புழக்கம் அதிகம். இதனுல் பேசுகிற வசனத்துடன் சார்புபெற்று நிற்கிறது புதுக் கவிதை.

பேசுகிற வசனத்தைச் சாராமல் எந்தக் காலத்தில் கவிதை இருந்தது? எல்லாக் காலங்களிலும் கவிதை நடந்து வந்த தடம் பேச்சு வழக்குத் தானே? இலக்கணக்காரர்கள் வகுத்துக் கூறியதும் பேச்சுத் தடத்தைத் தானே? இப்படியெல்லாம் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுக்க யாரும் முன்வரலாம்.

பேசுகிற வசனத்தைச் சார்ந்து இலக்கியம் படைத்த முறையும் உண்டு. அது பேச்சு வழக்குடன் ஒட்டிய இலக்கியம் என்று மதிப்பிடப்படும். இன்னும் இலக்கிய வசனத்தைச் சார்ந்து இலக்கியம் படைத்த முறையும் உண்டு. அது செய்யுள் வழக்குடன் ஒட்டிய இலக்கியம் என்று பேசப்படும். மேலும் இந்தப் பேச்சு வழக்கையும் செய்யுள் வழக்கையும் சார்ந்து இலக்கியம் படைப்பானதும் தமிழில் நடந்திருக்கிறது. புதுக் கவிதை அடிப்படையாகவே செய்யுள் வழக்குடன் ஒட்டாமல் பேச்சு வழக்குடன் ஒட்டி வருவது

சங்கக் கவிஞர்கள், இளங்கோ, கம்பன் அன்றுபேசிய வசனத்திலும் சொற்களை எடுத்து அமைத்தார்கள் என்பது மெய். ஆனுல் அவர்கள் ஒவ்வொருவருடைய சொல்வளமும் அவரவர் கால வகையின் மாதிரி.. அவர்களுடைய சொல் வளமே ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருப்பதும் மெய்தான். ஆனுல் இன்று அவர்களில் யாரைப் போலவும் சொல்வளம் கொண்டு, அதிலே சொல்ல விருப்பம் கொண்டு இந்த நூற்றுண்டில் நாம் எழுதவே முடியாது. அவர்களை விடவும் பேசுகிற வசனத்தின் தற்கால நடப்பிலிருந்து. அடித்தளத்திலிருந்து சொற்கள் உருவாக்கிப் படைக்க விரும்புகிருர்கள் புதுமுறைக் கவிஞர்கள்.

சில காலகட்டங்களில் தமிழில் பேசுகிற வசனத்தின் மூச்சை இறுக்கிவிட்டு, இலக்கியச் சொல் என்பனவற்றையே தேடிப்பிடித்து உருவாக்கிய நிலை ஏற்பட்டதல்லவா? இலக்கியத்துறையான சிறுபிரபந்தமே இந்த மாதிரியானது; அதுக்கு எதிர் நீச்சுதான் பாரதி கவிதை.

இலக்கியச் சொல்லே வைத்து உருவாக்கிய பாட்டு வகைக்குக் குமரகுருபரர் பாடியதை உதாரணத்துக்குச் சொல்லலாம்.

> ''மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
> மாசுணச் சூட்டு மோட்டு...''

இந்த வரிகளே போதும் குமரகுருபரர் என்ற பிரபந்தக் கவிஞர் பிடித்த போக்கை அறிய பாரதி எட்டையபுர ஜமீன் சூழ்நிலையில் பிரபந்தத் தோரணை ஒன்றையே பார்த்தார்; அதனுடனேயே கொஞ்ச காலம் வரை பழகினுர். ஆனுல் பிற்பாடு அதை உதறிவிட்ட பாரதி பிரபந்தக் கவிஞராக ஆகாமல் தற்காலப் பெரிய கவிஞராக வளர்ந்தார்.

> ''பார்! சுடர்ப் பரிதியைச் சூழவேபடர் முகில்
> எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
> என்னடீ! இந்த வன்னத் தியல்புகள்!
> எத்தனை வடிவம்! எத்தனை கலவை!''

இந்த உதாரணம் எல்லோரும் அறியக் கூடிய ஒன்று, பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் அர்ச்சுனன் திரௌபதிக்கு மாலைக் காலத்தை வர்ணித்துக் கூறும் இடம். இதில் பேசுகிற வசனமே அழகிய கவிதையாக உருவம் எடுத்து விளங்குகிறதை நாம் தரிசிக்கிறோம். இது புனைவியல் அழகாக இருந்தாலும் புதிய வியப்புச் சுவையைத் தருகிறது. இன்னும் இதில் கணந்தோறும் வெவ்வேறு இயல்புகள் காட்டுகிற மேகத்தைப்

றுகிறபோதே பாரதி ஆழ்ந்த ஒரு தொனிச் சுவையும் அமைத்திருக்கிறார். 'கணந்தோறும் ஒரு புதிய வண்ணம் காட்டிக் காளி பராசக்தி அவள் களிக்கும் கோலம்—கணந்தோறும் அவள் பிறப்பாள்'' என்பது தான் இதிலுள்ள தொனிச் சுவை.

[2]

இதை அடுத்து ந. பிச்சமூர்த்தியின் புதுக் கவிதைக்கு வருகிறேன்:

"மேற்கே நடந்தேன், நடந்தேன்...
இதுவா மேற்கு ?
அவியும் உடு,
குலையும் இருள்,
வீசும் இளமை
ஏறும் வெறி,
பாவி ரவி சவுக்கடியில்
சிதறும் சிவப்பு !''

'புதுமைப் பயணம்' என்ற சிறு கவிதையில் ஒரு பகுதி இது. முதலில் இதிலுள்ள சொல்வளம் தற்காலத்தது என்பதை நாம் அறிகிறோம் புனை வியல் அழகோடு இதில் மேற்கு கொடுக்கப்பட வில்லை இன்னும் சொன்னால், பாரதி மாலைப் பொழுதை வர்ணித்தது போல ந. பிச்சமூர்த்தி மேற்கை வர்ணிக்கவில்லை. அதாவது இது வர் ணனை முறையே அல்ல இதில் படிமம் எழ வைத்து ஒரு குறியீட்டையும் படைத்திருக்கிறார் ந. பிச்சமூர்த்தி. மேற்கு திசையைக் குறிக்காமல் மேற்கு நாடுகளைக் குறிக்கிறது மேற்குத் திசை யில் காலையில் நட்சத்திரம் மங்குவதும், இருள் மறைவதும் இளமை வந்து எழுவதும், சூரியன் சிவப்பாகித் தோன்றுவதும் இயற்கைதானே ? இந்த இயற்கையின் ஊடே குறியீடான காட்சி யைக் குறிப்பாகப் படைக்கிறார். ந. பிச்சமூர்த்தி. அதாவது மேற்கு நாடுகளில் அறியாமை அகன்று வும் இளமை வெறி கூத்தாடுகிறது என்றும், ஆலைத்தொழில் செய்யும் மக்கள் அதிகாரச் சவுக் கடியில் வேர்வையை இரத்தமாகச் சிந்துகிறார் கள் என்றும் குறியீட்டியல் காட்சி தருகிறார் ந. பிச்சமூர்த்தி. இதைப் படித்தவுடனே இவர் என்ன இயந்திரத் தொழிலுக்கு நேர் விரோதியா என்று கருதிவிட வேண்டாம் நாம். மனிதன் இயந்திர நாகரிகத்துக்கு அடிமையாகி விடக் கூடாது என்பதுதான் ந. பிச்சமூர்த்தியின் கொள்கை.

"அவியும் உடு,
குலையும் இருள்,
வீசும் இளமை
ஏறும் வெறி,
பாவி ரவி சவுக்கடியில்
சிதறும் சிவப்பு !
இதுவா மேற்கு ?''

இந்தக் குறுகிய வரிகள் முழுசும் ஒரு படி மத்தை எழுப்பி நிற்கின்றன. இங்கே ந. பிச்சமூர்த்தி படிம வியலாக எழுத முற்பட்டிருக்கிறார். இதுதான் நாம் அறிந்து கொள்ள வேண்டிய புதுமை. படிமவியலை ரொம்ப சொற் சுருக்கத் தில்தான் அடைய முடியும். மேலும் படிம வியல் ரொம்ப குறுகிய பாட்டில்தான் அழகுபடத் தோன்ற முடியும். காலமோ அச்சு இயந்திர வளப்பக்காலம். முன்மாதிரி ஏட்டுச் சுவடியில் எழுதுகிறதும் படிக்கிறதும் அறவே இல்லை. நினை வில் தங்கியிருக்க வேண்டும் என்று பாட்டுக்கு எதுகை மோனை சீர், தளை ஆகியவை பொருந்த வைத்த காலம் ஏட்டுச் சுவடிக் காலம். மேலும் பாட்டு என்றால் ஓசையோடு பொருந்தியும் காதில் விழுந்து நினைவில் தங்கியிருக்க வேண்டும் என்று இருந்தது ஏட்டுச் சுவடிக் காலத்தில். இப்போது அச்சு இயந்திரக் காலம் என்பதை நாம் மறக்கக் கூடாது. பாட்டுக்குக் குறுகிய உருவம் இருந் தால் போதும் என்று நமக்குத் தோன்றுகிறது. காரணம் அச்சுப் பதிப்பில் பாட்டைக் கண்களால் தான் முதலில் பார்க்கிறோம். கண்களால் பத்திரி கையில் அல்லது புத்தகத்தில் அல்லது கையெழுத் துப் படியில் பாட்டைப் பார்க்கிறபோது மௌன வாசிப்பு தொடங்குகிறது. பாட்டிலே ஏதாவது படிமக் காட்சி இருக்குமானால் அச்சுப் பதிப்பி லுள்ள அந்த வரிகள் கண்களின் வழியாக நமது மனசுக்கு நேரே போகின்றன ஒரு பாட்டு ஓசை யாகக் காதில் நுழைகிறதிலிருந்து படிமக் காட்சி யாகக் கண்ணில் நுழைவது வேறு பட்டது இது இப்போது நமக்குச் சாத்தியமாகி இருக்கிறது. படிமவியலுக்கும். குறுகிய பாட்டு உருவத்துக்கும், அச்சுப் பதிப்புக்கும். மௌனவாசிப்புக்கும். கண் வழியே கவிதை நுழைவதுக்கும் தற்காலத்தில் நெருங்கிய தொடர்பு இருக்கிறதை நாம் உணர வேண்டும்.

"அச்சுயந்திரமும், லைப்ரரிகளும், மௌன வாசிப்பும் தோன்றிய பிறகு —அவை தோன்றாத காலத்தில் அமல் செலுத்திய கேள்வி மரபும் ஸ்தூலக் காதின் ஆட்சியும் கண்ணெதிரே மறைந்து வருவதைக் கண்ட பிறகு கவிதையை வேறுவிதமாக அமைக்க—ஏன் முயலக் கூடாது ?'' என்று இதுக்காகவே தான் ந. பிச்சமூர்த்தி கேட்டி ருக்கிறார்.

இதையே மேலும் தெளிவாகக் கூற விரும்பு கிறேன் இந்தப் புதுக் கவிதை நமக்குப் பழக்க மான கேள்வி மரபில் வந்திருப்பது அல்ல. இப் படிச் சொன்னதால் புதுக் கவிதையில் ஒலிநயம் இராது என்று நாம் பொருள் கொள்ளக் கூடாது. புதுக் கவிதையில் ஒலிநய வேறு பாடுகளும் தோன்றுகிறது உண்மை. ஆயினும் புதுக் கவிதை காட்சி மரபில் தற்காலத்தில் உருவாகி வந்திருப் பது என்பது நாம் உணர வேண்டிய உண்மை.

[3]

கேள்வி மரபோடு பாட்டு அருணகிரி நாதரின் ஒரு திருப்புகழ்ப் பாட்டுஅமைத்துக்கு

போதாதா? பாரதி சில சமயங்களில் கேள்வி மரபுக்கு இயல்பு மீறி விளைந்திருக்கிறார்.

"நாடித் தவம் புரிந்து
பீடுற்ற முனிவரர்
கேட்ற்ற தென்று கண்டு
கூடக் கருது மொளி
மாடத்தி லேறிஞானக்
கூடத்தில் விளையாடி
ஓடத் திரிந்து கன்னி
வேடத்தி ரதியைப் போல்...

இது ஒரு இசைப் பாடல் உருவத்தில் வந்தாலும் பாரதிக்கு இயல்பு மீறிய கேள்வி மரபாகவே தோன்றுகிறது.

தமிழில் புதுக் கவிதை படிமவியலின் இயக்கத்துடன் பிறந்திருக்கிற கவிதை. படிமவியலிலிருந்து குறியீட்டியலுக்கு மாறி வளர்வதுக்குத் தமிழில் ரொம்ப காலமே ஆகவில்லை. இரண்டும் சமகாலப் பிறவிகளாகத் தமிழில் பிறந்திருக்கிறதைப் புதுமை என்றே சொல்லலாம். இந்தப் படிமவியலின் காட்சி மரபுக்கு ந. பிச்சமூர்த்தி தவிர, வேறொரு புதுமுறைக் கவிஞரை அடுத்துச் சொல்ல விரும்புகிறேன் அவர் இலங்கையைச் சேர்ந்த தர்மு சிவராமு. 'எரிகல்' என்ற அவருடைய படிமவியல் சிறுகவிதையைப் பார்ப்போம்.

"வெளிவானம் எரிகல்லில்
கிழிபட்டுத் தெரிகிறது :
வானக் கடல்முத்து
விழுகிறது இருட்கரியின்
வயிரம் உதிர்கிறது
இயற்கை தன் இருளைமொழி
பெயர்த்து உதிர்த்த கவி...
உதரக் குடல்நாடி
உதிரும் சிறு குழவி..."

இந்தக் கவிதைக்கு அடிப்படை காட்சி மரபு தான். நவீன ஓவியச்சார்பான படிமப்பாங்கு இதில் தெரிகிறது. அதாவது முதலில் எரிகல் வானத்திலிருந்து விழுகிறதாகச் சொல்லி, அதன் பிறகு எரிகல்லை வானக் கடல் முத்தாகவும் இருட் கரியின் வயிரமாகவும் இருளை மொழிபெயர்த்த கவிதையாகவும், கடைசியில் பூமிக் குடலை நோக்கி விழுகிற குழந்தையாகவும் தனித் தனிச் சித்திரங்களாகத் தீட்டி நாலு சித்திரங்களையும் நமது அகக் காட்சியில் ஒரே கூட்டுக் கலவைச் சித்திரமாக உருவாக்கி விடுகிறது இந்தக் குறுகிய கவிதை. எந்த ஒரு தத்துவ தரிசனத்துக்காகவும் இதன் முன்னால் உட்கார்ந்து நாம் தவம் இருக்க வேண்டியதில்லை. இது காட்சி மரபில் படிமமே தானாகித் தானே படிமமாகி விளங்குகிற கவிதை.

தர்மு சிவராமுவின் இந்தக் கவிதையிலுள்ள படிமவியலே இதன் உருவத்தைத் தீர்மானிக்க உதவுகிறது. மரபான யாப்புருவம் இதன் எட்டு வரிகளில் வரவில்லை. இதையே ஒரு வெண்பாவிலோ அல்லது பிற பாவிலோ அமைத்தாலென்ன என்று நீங்கள் அவசியம் கேட்பீர்கள். இதே பொருளை வெண்பாவின் சீர்களிலோ பிற பாவின் சீர்களிலோ கொண்டு வரலாம் தான். இதைப் போய் முடியாது என்று யார் சொல்வார்கள்? ஆனால் அப்படிக் கொண்டு வந்தால் கேள்வி மரபுக்கு இலக்காகிவிடும் பாட்டு. படிமவியலாக எழுத நினைப்பதால் முதன்மையாகக் காட்சி மரபுக்கே இலக்காக வேணும் பாட்டு என்ற கருத் தோட்டத்தில்தான் தர்மு சிவராமு இதை யாப்புச் செய்யுள் முறையில் செய்யாமல் இலகு செய்யுள் முறையில் படைத்திருக்கிறார். இங்கே படிமவியலுக்கும் இலகு செய்யுள் முறைக்கும் உள்ள தொடர்பை நாம் உணர வேண்டியது அவசியம்.

"வெளிவானம் எரிகல்லில்
கிழிபட்டுத் தெரிகிறது.

இரண்டு சொற்களில் ஒவ்வொரு வரி. இந்த வரி அமைப்பு படிமவியலுக்கு ஏற்றபடி குறுகியது மரபான யாப்பில் வராமல் புதிய படிமவியலுக்கு ஏற்றபடி காட்சி மரபில் மனசை இசைவித்து ஒலிக்கின்றன இந்த வரிகள். இவைகளை வெறும் வசனமே என்று சொல்லிவிட முடியாது ஏனென்றால் இவை செய்யுள் முறையில் ஒலிக்கின்றன. இது மாதிரி செய்யுள் முறையையே 'இலகு செய்யுள் முறை' என்று குறிப்பிடுகிறோம்.

(தொடரும்)

ஏர் புதிதா?

கு. ப. ராஜகோபாலன்

முதல் மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகி விட்டது,
வெள்ளி முளைத்திடுது, விரைந்து போ
நண்பா!
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!
பொன் ஏர் தொழுது, புலன் வழி பட்டு,
மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்!
ஏர் புதிதன்று ஏறும் நுகத்தடி கண்டது,
காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்
கை புதிதா, கார் புதிதா? இல்லை.
நாள் தான் புதிது நட்சத்திரம் புதிது
ஊக்கம் புதிது, உரம் புதிது!
மாட்டைத் தூண்டி, கொழுவை அழுத்து.
மண் புரளும், மழை பொழியும்,
நிலம் சிலிர்க்கும் பிறகு நாற்றும் நிமிரும்,
எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்
கவலையில்லை!
கிழக்கு வெளிக்குது!
பொழுதேறப் பொன் பரவும் ஏரடியில்,
நல்ல வேளையில் நாட்டுவோம் கொழுவை.

பின்பற்றல் கொள்கை

பிளேடோ

நம் நாட்டமைப்பின் நான் உணர்கின்ற பல சிறப்புக்களில் கவிதையைப் பற்றிய சட்டத்தை விட வேறெதுவும் நான் சிந்தனை செய்து பார்க்கையில் என்னை மகிழ்விப்பதில்லை.

நீ எதைக் குறிப்பிடுகிறாய் ?

பின்பற்றல் கவிதை விலக்கப்பட்டதை, அது நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடாதே... இரகசியமாகத்தான் இதைச் சொல்ல வேண்டும்; ஏனென்றால் துன்பியலார்க்கும், மற்ற பின்பற்றல் கும்பலுக்கும் என் சொற்கள் திரும்பச் சொல்லப் பட வேண்டி நேர்வதை நான் விரும்ப மாட்டேன்; என்றாலும் உன்னிடம் இதைச் சொல்வதில் எனக்குத் தயக்கமில்லை. கவிதைப் பின்பற்றல்கள் கேட்போரின் அறிவுத் திறத்திற்கு அழிவாக அமைகின்றன; மேலும் அவர்களது உண்மையான இயல்பைப் பற்றிய தெளிவு ஒன்று மட்டுந்தான் அவர்களுக்கு மாற்றாகும்.

உன் கூற்றின் உட்கருத்தை விளக்கு

சரி, நான் சொல்லுகிறேன். எனது மிக இள வயது தொட்டு எனக்கு ஹோமரிடம் பயபக்தி இருந்து வந்துள்ளது. இப்போதுகூட சொற்களை என் உதட்டில் தடுமாறச் செய்கிறது அது; ஏனெனில் அவன் ஒரு பெருந்தலைவன், அதோடு உள்ளங்கவர் துன்பியல் வட்டத்தின் ஆசிரியன். என்றாலும் உண்மையைவிட அதிகமாக ஒரு மனிதனைப் போற்றலாகாது. அதனால் நான் சொல்லியே தீர்வேன்.

மிக நல்லது என்றான் அவன்.

அப்போது நான் சொல்வதைக் கேள்; இல்லை, எனக்குப் பதில் சொல்.

உன் கேள்வியைக் கேள்.

பின்பற்றல் என்பது என்ன என்று நீ எனக்குச் சொல்வாயா ? ஏனென்றால் உள்ளபடியே அது எனக்குத் தெரியாது.

அப்படியென்றால் நான் அறிந்திருப்பது நடக்கக் கூடியது தான் !

ஏன் கூடாது ? ஒளி குறைந்த கண் அடிக்கடி ஒளி நிறைந்த கண்ணை விட அதிக விரைவில் ஒரு பொருளைப் பார்க்கலாம்.

உண்மைதான், என்றான் அவன். என்றாலும் உன் எதிரில், தெளிவற்ற கருத்து எனக்குத் தெரிந்திருந்தாலும் கூட அதைச் சொல்வதற்கு வேண்டிய துணிவை என்னால் திரட்ட முடியாது. அதன் இயல்பை நீயே ஆராய்.

சரி. இந்த ஆராய்ச்சியை நம் வழக்கமான முறையிலே தொடங்குவோமா ? பல தனிப்பட்டவைகளுக்கு ஒரு பொதுப் பெயர் உள்ள போதெல்லாம் ஒரு பொருத்தமான கருத்தோ அல்லது வடிவமோ அவைகளுக்கு இருப்பதாக நாம் கருதிக் கொள்கிறோம். நான் சொல்வது புரிகிறதா ?

புரிகிறது.

ஒரு சாதாரண எடுத்துக் காட்டைப் பார்ப்போம் இவ்வுலகத்தில் படுக்கைகளும் மேஜைகளும் உள்ளன. ஏராளமாக, இல்லையா ?

ஆமாம்.

ஆனால் அவைகளைப் பற்றிய இரண்டே கருத்துக்கள் அல்லது வடிவங்கள் உள்ளன – படுக்கையைப் பற்றிய கருத்து ஒன்று; மேஜையைப் பற்றிய கருத்து இன்னொன்று.

உண்மை

அவை இரண்டில் ஒன்றைச் செய்பவன் நம்முடைய பயன்படுத்தலுக்காக அந்தந்த கருத்துக்கேற்ப படுக்கையைப் படைக்கிறான்; அல்லது அவன் மேஜையைப் படைக்கிறான்.—இந்த இடத்திலும், இதே போன்ற மற்ற இடங்களிலும் இப்படித்தான் நாம் வழக்கமாகப் பேசுகிறோம் - ஆனால் எந்தக் 'கைக் கலைஞனும் தானாகவே அந்தக் கருத்துக்களைப் படைப்பதில்லை; எப்படி முடியும் அவனால் ?

முடியாது.

மேலும் இன்னொரு கலைஞன் உண்டு. நீ அவனைப் பற்றி என்ன சொல்வாய் என்று நான் தெரிந்து கொள்ள விழைகிறேன்.

யார் அவன் ?

மற்றெல்லா படைப்பாளிகளின் எல்லா படைப்புக்களையும் படைக்கிறவன் அவன்.

என்ன அற்புதமான மனிதன் !

சற்றுப் பொறு, நீ அப்படிச் சொல்வதற்கு நிறைய காரணம் கிடைக்கும். ஏனென்றால் அவன்தான் படைக்கும் திறம் பெற்றவன்— எல்லா வகையான கலங்களை மட்டுமின்றி, தாவரங்களையும், விலங்குகளையும், தன்னையும், மற்றெல்லா பொருட்களையும், மண்ணுக்கடியில் உள்ளவற்றையும். அவன் கடவுளரையும் கூட படைக்கிறான்.

அவன் மந்திரவாதியாகத்தான் இருக்க வேண்டும். இதில் எனக்கு ஐயமில்லை.

ஓ ! உன்னால் இதை நம்ப முடியவில்லை, இல்லையா ? அப்படிப்பட்ட படைப்பாளி இல்லை யென்று நீ நினைக்கிறாயா ? அல்லது ஒரு வகையில் பார்த்தால் இவை எல்லாவற்றின் படைப்பாளி

இருக்கலாம் என்றும், இன்னொரு வகையில் பார்த்தால் இல்லை என்றும் நினைக்கிறாயா ? இவற்றையெல்லாம் நீயாகவே படைக்கக்கூடிய வழியொன்று உண்டு என்பது உனக்குப் புலப்படவில்லையா ?

என்ன வழி.

மிக எளிய வழிதான். சரியாக சொல்லப் போனால், பல வழிகள் உண்டு இந்த அற்புதத்தை விரைவாகவும் எளிதாகவும் நிறைவேற்ற. ஒரு கண்ணாடியைச் சுற்றிச் சுற்றித் திருப்புவதைவிட விரைவானது இல்லை.— மிக் விரைவில் நீ கதிரவனையும் விண்ணையும் உலகையும் உன்னையும் விலங்குகளையும் தாவரங்களையும் அதோடு இப்போது பேசிக்கொண்டிருந்த மற்றெல்லா பொருட்களையும் கண்ணாடியில் படைக்கலாம்

ஆம், என்றான் அவன். ஆனால் அவைகள் தோற்றங்கள் தானே ஆகும் ?

மிக நன்று, என்றேன் நான். நம் விவாதத்தின் முக்கியமான பகுதியை நீ நெருங்குகிறாய். என்னுடைய கருத்துப்படி, ஓவியனும் அப்படிப்பட்ட ஒருவனே; தோற்றங்களைப் படைப்பவனே அவன், இல்லையா ?

நிச்சயமாக.

அவன் படைப்பவை உண்மையற்றவை என்று நீ இப்போது சொல்லலாம் என்று நான் எண்ணுகிறேன். இருப்பினும் ஒரு வகையில் பார்த்தால் ஓவியனும் படுக்கையைப் படைக்கிறான்.

ஆம், என்றான் அவன். ஆனால் ஒரு உண்மையான படுக்கையை அல்ல.

மேஜையைச் செய்பவனைப்பற்றி என்ன நினைக்கிறாய் ? நம் நோக்குப்படி மேஜையின் சாரமான கருத்தைப் படைக்காமல், ஒரு தனிப்பட்ட மேஜையைத்தான் இவனும் செய்கிறான் என்று நீ சொல்லிக் கொண்டில்லை ?

ஆம், நான் சொன்னேன்.

எது இருக்கிறதோ அதை அவன் செய்யவில்லை என்றால், அவன் உண்மையான இருப்பைப் படைக்க முடியாது; மாறாக, இருப்பின் ஒரு மாதிரியைத்தான் படைக்க முடியும். அதனால் மேஜையைச் செய்வோனுடைய அல்லது மற்ற படைப்பாளிகளுடைய படைப்பு உண்மையான இருப்புடையது என்று யாராவது சொன்னால், அவன் உண்மைதான் பேசுகிறான் என்று நாம் கருதுவது அருமை.

எப்படி இருந்தாலும் தத்துவ ஞானிகள் அவன் உண்மையைப் பேசவில்லை என்று தான் சொல்வார்கள்.

அதனால் அவனது படைப்பும் உண்மையின் தெளிவற்ற வெளியீடுதான் என்பதில் வியப்பில்லை.

வியப்பில்லை தான்.

இவ்வளவு நேரம் நாம் பார்த்த எடுத்துக் காட்டுக்களின் துணைகொண்டு யார் இந்த பின் பற்றி என்று ஆராய்வோமா ?

நீ விரும்பினால்.

நல்லது. இங்கு மூன்று படுக்கைகள் உண்டு. ஒன்று இயற்கையில் இருப்பது; இதைப் படைத்தது கடவுள் என்று நாம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்; ஏனென்றால், வேறு யாரும் இதைப் படைத்திருக்கலாமா ?

இல்லை.

இரண்டாவது தச்சனின் படைப்புத்தானே ?

ஆம்.

கடைசியாக, ஓவியனின் படைப்பு மூன்றாவதா ?

ஆம்.

எனவே, படுக்கைகள் மூன்று விதம்; மூன்று கலைஞர்கள் அவற்றை மேற்பார்க்கின்றனர்; கடவுள், தச்சன், ஓவியன்; இல்லையா ?

ஆம், மூன்று விதம் உண்டு.

கடவுள், தன் விருப்பத்தாலோ அவசியத்தாலோ ஒரே ஒரு படுக்கையைத்தான் இயற்கையில் படைத்தார் 'இதைப் போன்ற இரண்டும் இரண்டுக்கு மேற்பட்டதுமான கருத்தமை படுக்கைகளைக் கடவுள் படைக்கவே இல்லை, படைக்கப் போவதும் இல்லை.

ஏன் அப்படி ?

இரண்டு மட்டும் அவன் படைத்திருந்தாலும், இவை யிரண்டும் தம் கருத்துக்கென ஏற்றுக் கொள்ளும் மூன்றாவது ஒன்று நிச்சயமாகப் பின்னால் தோன்றும். எனவே இதுதான் கருத்தமை படுக்கையாகுமே தவிர மற்ற இரண்டல்ல.

மிகவும் சரி, என்றான் அவன்.

கடவுளுக்கு இது தெரியும். எனவே ஒரு தனிப்பட்ட படுக்கையின் தனிப்பட்ட படைப்பாளி ஆகாமல், ஒரு உண்மையான படுக்கையின் உண்மையான படைப்பாளி ஆக விரும்பினான்; அதனால் தான் மூலாதாரமாகவும் இயற்கையிலும் ஒன்றே ஒன்றான படுக்கை ஒன்றை அவன் படைத்தான்.

அப்படித்தான் நாம் நம்புகிறோம்

அப்போது அவனைப் படுக்கையின் இயற்கை ஆசிரியன் அல்லது படைப்பாளி என்று சொல்வோமா ?

ஆம், என்றான் அவன். படைப்பின் இயற்கைப்படி, கடவுள்தான் இதற்கும் மற்றெல்லா பொருள்களுக்கும் ஆசிரியன் ஆகிறான்.

நாம் தச்சனைப்பற்றி என்ன சொல்வது ? அவனும் இப்படுக்கையைப் படைத்தவன் அல்லவா ?

ஆம்

ஆனால், ஓவியனை நீ படைப்பாளி என்பாயா?

நிச்சயமாக இல்லை.

அவன் படைப்பாளி இல்லை என்றால், படைக்கையுடன் அவனது தொடர்பு என்ன?

மற்றோர் படைக்கின்றவற்றின் பின்பற்றி என அவனை அநேகமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நல்லது என்றேன் நான். அப்படியானால், இயற்கையிலிருந்து கீழே மூன்றாவதாக இருக்கிற அவனை ஒரு பின்பற்றி என்று நீ அழைக்கிறாயா?

நிச்சயமாக என்றான் அவன்.

அதனால், துன்பியல் கவிஞன் ஒரு பின்பற்றி எனவே மற்ற பின்பற்றிக்களைப் போல இவனும் அரசனிடத்திருந்தும் உண்மையினிடத்திருந்தும் மூன்று படி விலகியுள்ளான்.

அப்படித்தான் தோன்றுகிறது.

சரி. பின்பற்றியைப்பற்றி நமக்கு கருத்தொற்றுமை உண்டு ஆனால், ஓவியனைப்பற்றி—? இயற்கையின் மூலமாக இருப்பதையா அல்லது கலைஞர்களின் படைப்புக்களை மட்டுமா—இவற்றில் எதை அவன் பின்பற்றுகிறான் என்று நீ நினைக்கிறாய் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பின்னதை.

அதன் இருப்பையா அல்லது தோற்றத்தையா? இதை நாம் முடிவு கட்டத்தான் வேண்டும்.

நீ என்ன சொல்கிறாய்?

நான் சொல்வது இதுதான்: ஒரு படுக்கையை நீ பல கோணங்களிலிருந்து பார்க்கலாம், நேராகவோ, கோணலாகவோ, அல்லது வேறு கோணத்திலிருந்தோ. அல்லது அந்தப் படுக்கை மாறுபட்ட தோற்றங்கள் கொள்ளும். ஆனால் உண்மையில் எவ்வித மாற்றமும் இல்லை. இதே போலத்தான் மற்ற பொருள்களுக்கும்.

ஆம், என்றான் அவன். இம் மாற்றம் புறத்தோற்றத்தைச் சார்ந்ததே.

நான் இப்போது வேறொரு கேள்வியைக் கேட்கப் போகிறேன். ஓவியக் கலை எதைப் பின்பற்றுவதற்காக உள்ளதென்று நீ நினைக்கிறாய்: ஒரு பொருளின் தோற்றத்தையா அல்லது உண்மை இருப்பையா?

தோற்றத்தை.

எனவே ஒரு பின்பற்றி, உண்மைவிட்டு நீண்ட தொலைவு விலகி உள்ளான். அவன் எல்லாவற்றையும் செய்ய முடியும்; ஏனெனில் லேசாகத் தொடுகிறான் அவன் அவற்றின் ஒரு சிறு பகுதியை; அப் பகுதியும் ஒரு சாயலாகும். அவர்களுடைய கலைகளைப்பற்றி ஒன்றும் தெரியாத போதும் கூட, ஒரு ஓவியன் ஒரு காலணிக் கலைஞனையோ, ஒரு தச்சனையோ அல்லது வேறெந்த கலைஞனையோ தீட்டலாம். அவன் நல்ல கலைஞனாக இருந்தால், தச்சனின் படத்தைத் தொலைவிருந்து காட்டிச் சிறுவர்களையும் பேதைகளையும் ஏமாற்றலாம்; அவர்களும் தாங்கள் ஒரு உண்மைத் தச்சனைக் காண்பதாகவே எண்ணிக் கொள்வார்கள்.

நிச்சயமாக.

எல்லா கலைகளையும், அடுத்தவனுக்குத் தெரிந்த மற்றெல்லா செய்திகளையும் அதோடு எந்த ஒரு செய்தியையும் மற்றெவனையும்விட அதிகப்படியான திட்பத்துடன் தெரிந்த ஒரு மனிதனைக் கண்டுவிட்டதாக எப்பொழுதாவது யாராவது சொன்னால் — சொல்வது யாராக இருந்தாலும் தான் சந்தித்த ஒரு மந்திரவாதியாலோ அல்லது நடிகனாலோ ஏமாற்றப்பட்டு அறிவு அறியாமை பின்பற்றல் ஆகியவற்றின் இயல்பைத் தானாகவே பகுத்துணர முடியாத காரணத்தால் அனைத்தும் அறிந்தோர் இவர் என்று எண்ணிய பேதை அவன் என்றுதான் நாம் கருத வேண்டும் என நினைக்கிறேன்.

(செல்வம்: மொழி பெயர்த்தது)

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT EZHUTTHU TAMIL MONTHLY

Form IV

See Rule 8

1. Place of Publication ; MADRAS
2. Periodicity of its Publication : MONTHLY
3. Printers Name : M. RAMANATHA RAO
   Nationality : INDIAN
   Address : 97, BIG STREET, TRIPLICANE MADRAS-5.
4. Editor and Publisher's Name :
   C. S. CHELLAPA
   Nationality : INDIAN
5. Name & Addresses of individuals who own the newspaper and partners or share holders holding more than 1% of the total Capital. | C.S. Chellappa, 19-a, Pilliar Koil Street, Triplicane, Madras-5

I. C. S. Chellappa hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1-3-67 C. S. CHELLAPPA
Publisher.

ஜப்பானிய
ஓரங்க நாடகம்

திருடர்கள்

கவாட்டாக்கி மொக்வாமி

தமிழாக்கம் : ஆ. ம. ராமச்சந்திரன்

பாத்திரங்கள் :

சீமோசோ

சென்டா

மொசிசுக்கி அக்கீரா

சேமியா சிற்றுண்டி விற்பனையாளன்

யாத்திரீகர்கள்

காட்சி :

டோக்கியோவில்? யாஷ்குனி திருத்தலத்தின் முன்பு. (அரங்கத்தில் இடது பக்கமாகவும், பார்வையாளருக்கு வலது பக்கமாகவும்.)

இடது பக்கமாக ஒரு பெரிய "டோரீ."

இரு பக்கமும் கற்களால் அமைக்கப்பட்ட தாழ்ந்த வேலி. நெடிது வளர்ந்து கோபுரம் போன்றமைந்துள்ள பைன் மரங்கள். பின் பக்கமாக ஒரு ஜதை தாமிர விளக்குகள்—தூண்களில் அமைக்கப்பட்ட விளக்குகளும் உள்ளன.

பின் இருந்து பார்ப்பவர்களுக்கு மங்கலான ஒளி தெரிகிறது. அப்போது இரவு.

திரை இழுக்கப்படும் போது, சேமியா சிற்றுண்டி விற்பனையாளன் கடையை வைக்கிறான்.

யாத்திரீகர் உடையில் இருவர், தின்று கொண்டிருக்கிறார்கள்.

எங்கோ மணி அடிக்கிறது.

முதல் யாத்திரீகன் : இன்னொரு கோப்பை சேமியா பலகாரம் !

சேமியா விற்பவன் : நல்லதுங்க.

இரண்டாவது யாத்திரீகன் : தோ...அதை செய்றதுக்குள்ளே, எனக்கு இன்னொன்னு.

சேமியா விற்பவன் : நல்லதுங்க (அவன் சிற்றுண்டியை தயார் செய்கிறான்.)

முதல் : இப்போதெல்லா சிலரே இந்த பலகாரத்தை வெளியே கொண்டு வந்து விற்கறாங்கோ.

சேமியா : அது சரி. அவங்கெல்லாம் சுற்றுப்புறத்துலே இருக்காங்க. யாரும் பட்டணத்திலே இல்லிங்கோ.

இரண்டாவது : ஆனால், வருடா வருடம் அதிகம் பேரு கொழுக்கட்டைகளை விற்கிறதை பார்க்கறேன்.

சேமியா : ஆமாங்க. . அதிலேதான் ஒரு மாற்றம். (அந்த இரண்டு வாடிக்கைக்காரர்களுக்கும் பலகாரம் வழங்கியதும், அவர்கள் தின்று கொண்டே பேசுகிறார்கள்.)

முதல் : எப்பவுமில்லாமே இப்படி நல்லா இருக்குதே, இல்லையா ?

இரண்டாவது : ஆமாம். அப்படித்தான் இருக்குது. ரொம்ப நல்லா பக்குவப்படுத்தியிருக்குது

சேமியா : அண்டையிலே சேமியா பலகாரக் கடைகள் அதிகமில்லே அப்படியிருந்தாலும் வழிவிலகியல்லவா இருக்குது. பலகாரத்துக்கு சாமான்கள் கொடுப்பதிலேயும் பக்குவமா செய்றதிலும் நான் ரொம்ப ஜாக்கிரதையானவன் அநேகம் பேரு நான் வர்ர வரைக்கும் எனக்காக காத்திருக்கவும் செய்வாங்க. அவ்வளவு பிரியமானவங்க். ஒரு சுற்று சுற்றி வர்ரதுக்குள்ளே எல்லாமே தீர்ந்து போயிடும்.

முதல் : நான் ஆச்சரியப்படலே. ஓட்டலிலே தயாரிக்கப்படறுப் போலே இருக்கு.

இரண்டாவது : இது போல நல்ல பொருளுக்கு ஜனங்க காத்திருப்பது ஆச்சரியமில்லே.

சேமியா : நீங்க ரொம்ப அன்பா பேசறீங்க. பெரியவங்க நீங்க. இப்படி அலங்கரிச்சுக்குனு எங்கே போறீங்க?

முதல் : அரினோவுச்சிலே உள்ள பெரிய கோவிலிலே வணங்க. இந்த மத்தியானம் புறப்பட்டோம். நாங்க ஓடிக்கிட்டே இருக்கணும். ஓட்டலிலே வேறே தங்கிட்டோம் அதனாலே இப்போ நேரத்தை வீணாக்க முடியாதே.

இரண்டாவது : தெம்பு உண்டாக கொஞ்சம் குடிச்சோம். அங்கே கொஞ்ச நேரமாயிட்

டுது. அங்கேயிருந்து புறப்படறதுக்கு முன்னேயே இருட்டிப் போச்சு. இப்போவே ரொம்ப நேர மாயிடுச்சே.

சேமியா : நீங்க ரொம்ப களைப்பாயிருக் கணும்.

முதல் : அந்தக் கோவிலிலே யாருக்கு மரியாதை செலுத்தறுங்கோ ?

சேமியா : போரிலே இறந்த வீரர்களுக்கு! அவர்கள் அரசனுக்காகவே இறந்தார்கள். எளிமைக் குடியில் பிறந்த வீரர்களும் மன்னனுக்காகவ உயிர் துறந்தனர். ஆகவே தான் இது இவ்வளவு—எல்லோருடைய கவனத்தை இழுப்பதாகி விட்டது.

இரண்டாவது : இந்த வழியே இதனுள்ளே போய் பார்க்காமலே பல முறை போனதுண்டு. ஆனால், நீங்க சொல்றதைப் பார்த்தால் இது ரொம்ப கவர்ச்சியாயிருக்கும் போலே.

சேமியா : பக்கலே நீங்க பார்க்கணுமே, குளத்துலே அழகான ஊற்றும் தோட்டத்திலே மரங்களும் பார்க்க வேண்டியன ஆண்டு முழுதும் பூக்கள் பூத்து குலுங்கும். இதைப் பார்க்கறதுக்கே நீங்க ஒரு பயணம் வரணும்; இந்த தூரம் பெருசல்ல

முதல் : இதோ! உங்க பணம்.

சேமியா : நன்றிங்கோ. (அவன் பணத்தைப் பெற்றுக் கொள்கிறுன்.)

இரண்டாவது : நாம் இப்போ சீக்கிரமா போயாகணும்.

முதல் : இப்போ நேரம் என்ன ?

சேமியா : இப்போதாம் பத்தடிச்சுது.

இரண்டாவது : கபூக்கி ஆட்டத்துலே வர்ர ஒரு வரியைப் போல இருக்குது. இல்லையா ? (சேமியா விற்பனையாளனிடம் நேரத்தை கேட்டுக் கொண்டே).

சேமியா : அது எல்லாருக்கும் தெரிஞ்ச தொடர்தான்.

முதல் : நமக்கு நேரம் தெரிஞ்சுட்டதால் விரைவா போயாகணும்.

சேமியா : நானும் வாடிக்கையை கவனிக்கப் புறப்படனும்

இரண்டாவது : சரி வர்ரோம்.

சேமியா : நல்லதுங்க.

ஒரு குரல் : சேமியா இப்படி வா.

(இடது பக்கத்திலிருந்து குரல் வருகிறது. குரல் ஒலி வந்த திக்கு நோக்கி அவன் செல்கிறுன். இரண்டு பயணிகளும் மேடையிலிருந்து அனுமிச்சிக்கு போகிருர்கள். இசை ஆரம்பமாகிறது.)

நிகழ்ச்சியுரைப்பவன் : இலையுதிர் காலத்து இரவின் வழக்கம், வானத்தே ஒரு பூங்காற்று மேகங்கள் விரைந்து ஓட, வெளிப்பட விண் மீன்கள் கூட்டம் அங்குமிங்கும், விரைந்துவர ஒரு மனிதன், அந்நேரம், சென்டா நிற்கிறுன் ஒரு மரத்தடியில்.

(மணியோசை கேட்டதும் சென்டா இடது பக்கமிருந்து நுழைகிறுன். காற்றின் ஒலமும், மணியோசையும் கேட்கிறது, அவன் முகத்தின் கீழ்ப்பகுதி மறைந்து காணப்படுகிறது. ஒரு தோற்றத்தை அவன் தோற்றுவிக்கிருன்.)

சென்டா : மணி பத்தாகி விட்டது. ஆனால், சிமோசோ வரலையே. இன்னிக்கு இராத்திரி அவன் புறப்பட்றதுக்கு முன்னே கடை மூடிட்டு வருவதால்லே தீர்மானிச்சான் அவன் வராது இருந்துடுவான்னு என்னாலே நம்ப முடியலே. அவன் சத்தியமில்லா செஞ்சான். 'பர்ர்' காற்று எப்படி வலிமையா அடிக்குது. இது சில்லுன்னு மட்டுமா இருக்குது. விரைச்சுப்போற குளிரல்லே இருக்குது. குடிச்சுட்டுதான் வந்தேன் பலன் இல்லாமல்லே போயிடுச்சு. எப்படியோ மணி பதினொன்னுக்கு முன்னே வந்தா சரி,

நிகழ்ச்சி உரைப்பவன் : அவன் சுற்றும் முற்றும் பார்க்கிருன். கற்களின் குவியல் அருகே அங்கே அவன் உட்காருகிருன். நீண்ட நேரமாக காத்திருக்கும், அவன் முன். சிமோசா விரைந்து வருவதை, பார்க்கிருன் விண் மீன்களின் ஒளியில்.

சிமோசோ . (அனுமிச்சி மீது அடியெடுத்து வைக்கிருன். ஏறியவன் நின்று திரை அரங்கைப் பார்க்கிருன். 'டோரி'க்கு பக்கமாக இருப்பவன் சென்டாவாகத்தான் இருக்கும். மணி பத்தாகி விட்டது எனக்காகவே காத்திருப்பான், அவன். நான் சீக்கிரமாக போகணும்.)

நிகழ்ச்சி உரைப்பவன் : பழக்கப்பட்டவன் இரவு நேரப் பாதைகளில் வேகமாக அடியெடுத்து வைக்கிருன் 'டோரி'யை நோக்கி.

சிமோசோ : (திரை அரங்கை நெருங்கிக் கொண்டே) நீதானே அங்கே, சென்டா ?

சென்டா . ஓ நீதானு அண்ணே. சந்தோஷம் நீ வந்ததுக்கு.

சிமோசோ : மணி பத்தடிக்கும் போது நான் வீட்டிலேதான் இருந்தேன். அரைமணி நேரம் தாமதிச்சு வந்துட்டேன். ரொம்ப நேரமா காத்திருக்கிருயோ ?

சென்டா : இப்போதுதான் நானும் வந்தேன். குடிக்க ஓட்டல்லே கொஞ்சம் நின்னேன். இங்கே வந்து உட்காரு.

(மேல் துண்டால் கற்களின் தூசியை தட்டி விட்டு, இருவரும் உட்காருகிருர்கள்.)

இன்னக்கி இரவு உன்னோடே எங்கேயோ

---

1. யாசுக்குனி புண்ணியத்தலத்தில் மெய்ஜிக்களின் உரிமையை நிலைப்படுத்த நிகழ்ந்த போராட்டத்தில், இறந்த வீரர்களின் நினைவாக 1869-ல் நிறுவப்பட்டது. அதற்குப் பின் நிகழ்ந்த போரில் இறந்த வீரர்களுக்கும் அதுவே கோவிலாக அமைந்தது.

2 அனுமிச்சி — உயர்த்தி எழுப்பப்பட்ட பாதை. அரங்கின் பின்பக்கத்திலிருந்து சிகரர்களின் இடையே செல்லும் இப்பாதை.

போர்கணும்னு கேட்டியே யார் வூட்டுக்கு நாம் போறோம் ?

சென்டா : 'சார்கூரா சாகா'வில் கீழ் பகுதியில் ஒரு வீட்டிற்கு 'சகூனட்டை' நேரடியாக நிலைபெற செய்பவன், அங்கே வசிக்கும் அந்த நபர். இப்போது அவன் தன்னை அழகிய கையெழுத்து ஆசிரியனாக கூறிக் கொள்கிறான் நம்பக் கூடாத கடை கெட்ட நாய், 'சகூனட் வீழ்ச்சியடைவதற்கு முன்பே, மக்களை கொடூரமாக துன்புறுத்தியதற்காக அவன் விலக்கப்பட்டான் பொதுவான குற்ற மன்னிப்பு என்ற ரீதியில் அவன் மன்னிக்கப்பட்டான். மறுபடியும் சகூனட் அவனுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. அப்போதிருந்து திருடிய பணத்தை வட்டிக்கு விட்டுக் கொண்டு இருக்கான். எனக்குத் தெரிஞ்ச வரை. இப்போ அவன் செழிப்பா இருக்கான். மொச்சி-சூக்கி அக்கிரா என்ற பெயரில் இப்போ அவன் ஒரு பெரிய மனுஷன். அவன் வீட்டிலே இன்னிக்கு புகுந்து அவனையும் அவன் மனைவியையும் .கொன்று, அவனது பணத்தையெல்லாம் ஒழிக்கணும். பிறகு நான் ஒசாகாவிற்கு போவேன்.

சிமோசோ : இந்த மொசிசூக்கி பற்றி நானும் அறிவேன். பணம் அவனிடம் இருப்பது உண்மைதான். அவனை பயமுறுத்தியே அதைப் பெறலாமே. எதற்காக அவனையும் அவனது மனைவியையும் கொல்லணும் ?

சென்டா : அதற்கு நிறையக் காரணம் இருக்கு.

சிமோசோ : அவர்களை கொல்ல அப்படி என்ன காரணம் இருக்க முடியும் ?

சென்டா : இந்த வருடம் ஏப்ரல் மாத கடைசி வரை சிரவாக்கில் புகழ்பெற்ற ஜப்பானிய நடிகையாக இருந்தவள் இப்போது வெளிப்படையாக அவனுடைய மனைவி. அந்த பெண் மொசிசுக்கியும் அவனை ஏற்கிறாள். அவள் மீது நான் காதல் பைத்தியமா இருந்த போது, சில சமயங்களில் தொடர்ந்து பத்து நாட்கள் அவளோடு இருப்பதும் உண்டு. அவள் என்னோடவே இருந்திடுவாள் என முயற்சி செய்றதிலேயே என் அதிருஷ்டத்தை யெல்லாம் செலவழிச்சேன். ஆனால், அவள் பார்வை யெல்லாம் கவர்ச்சிகரமான பெரிய இலக்கிலேயே விழுந்து புழகிட்டதாலே அவள் எனக்கு உட்படலை நான் போலீசாரால் தப்பிக்க முடியாதவாறு சூழப்பட்டு இருந்தப்போ; அப்போ தேவையானால் அவளை வன் முறையில் கொண்டு செல்ல தீர்மானிச்சேன். ஒரு இடத்திலேயிருந்து மற்றொரு இடத்துக்கு சுற்றி அலைந்தேன்; முடிவாக இங்கு வந்து சேர்ந்தேன். தற்செயலா அவள் இருப்பிடத்தை இப்போ அறிந்தேன் நேத்து அவள் வீட்டுக்கு போனேன். அவளிடமிருந்து பணத்தைப் பறிக்க ஆனால், மொச்சுக்கி மக்களை கொடுமைப்படுத்திய அனுபவக்காரன்; மிக் கெட்டிக்காரன் அவன். என் மிரட்டல்களை அவன் பொருட்படுத்தவே இல்லை. சீர்வாக்கவர்விலிருந்த போது, அந்த பெண்ணுக்கு நான் கொடுத்திருந்த அந்த நூறு 'யென்னை' திருப்பிக் கொடுக்க முன் வந்தான். பணத்தை எடுத்துக்கொண்டு அப்போதே அந்த இடத்தை விட்டு போகச் சொன்னான். இப்படி பேசிக்கிட்ட பின் பணத்தை அவனிடம் வாங்கறது எனக்கு தாழ்வுன்னு நெனச்சேன். வெறுங்கையோடு அங்கிருந்து புறப்பட்டேன். மனம் வெறுத்த நிலையில். ஆனால், இன்னைராத்திரி இரண்டாம் முறையா, பழிவாங்க என்னோடு வரணும் நீ. மொசுசூக்கியையும், அவன் மனைவியையும் கொன்றது மூலம் கடனை தீர்த்துக்கணும் பணம் எவ்வளவு கிடைக்குதோ அதை நாம் பங்கிட்டுக்குவோம். இந்தக் காரியம் முடிஞ்சதும் ஒசாகாவில் ஆறுமாசம் நான் தங்கப் போறேன். உன்னைக் கேட்கற உதவி இது தான். எனக்குத் தெரியும் நீ விரும்ப மாட்டாய்ன்னு. ஆனால், நான் உன்னை சகோதரனா பாவிச்சு இந்த வேலையிலே உதவி கேட்கறேன்.

சிமோசோ : (சிறிது நேரம் ஆழ்ந்து சிந்திக்கிறான்) வருத்தமா இருக்கு. நீ கேட்பதை என்னால் செய்ய முடியாது.

சென்டா : ஏன், உன்னால் முடியாது ?

சிமோசோ : ஏன் மனசு மாறிப் போச்சு. கொலை செய்றதை கை விட்டுட்டேன்.

சென்டா : சொன்னதையே திரும்பத் திரும்பத் சொல்லி உன்னை சோர்வடைக்க நான் பிரியப்படலை. கொலையை விட்டுற்றது ரொம்ப நல்லது நான் நாளைக்கே கைது செய்யப்பட்டால் நீயும் மாட்டிக்குவே. தண்டனை சாதாரணமாத்தான் உனக்கு கிடைக்கும். பத்து வருஷங்க தண்டிப்பாங்க. வாழ்நாள் பூரா கடுங்காவலில் கழிக்க நேரிடலாம், கடுமையான தண்டனையானு.

சிமோசோ : அதை நான் தெரிந்துதான் இருக்கேன், நீ சொல்றதுக்கு முன்னே. என்னை பிடிச்சுடுவாங்க என்பதை நான் எதிர்பார்த்துத் தான் இருக்கேன் ஆனா எனக்கு ஒரு நம்பிக்கை. என் வழக்கத்தை மாத்திக்க நல்ல காரணம் கிடைச்சுது. கேள்.

நிகழ்ச்சி உரைப்பவன் : காரிருள் சூழ அங்கே வழிப்போக்கர்களின் நீழலே இல்லை, புற்களிடை, பூச்சிகள்தான் ஓலமிடுகின்றன.

சிமோசோ : (அவனைச் சுற்றி உற்றுப் பார்க்கிறான்)

உன்னைவிட்ட பிறகு, நான் பிறந்த பட்டணத்துக்குத் திரும்பினேன். என்னுடைய தகப்பனும். தங்கையும் எப்போதும் போலவே இருந்தாங்க. ஆனால் எந்தத் தகப்பனிடம் என் மகனை விட்டு வந்தேனோ, அவன் நொண்டி நடந்தான். அவன் எப்படி முடமானான் என்பதைக் கேட்டபோது நான் திடுக்கிட்டேன். என்னுடைய தகப்பனர் கூரான பிளக்கும் கருவியை அலமாரியில் வச்சிட்டு வெளியே போயிருந்தார். நள்ளிரவில் எங்கள் வீட்டு பூனை எலிபிடிக்கும் பரபரப்பில் அந்த வெட்டுக் கத்தியை தட்டிவிட்டதால், கீழே தூங்கிக் கொண்டிருந்த என் மகன் காலில்

விழுந்ததால் பலத்த காயம் ஏற்படவே அவன் முடமாயிட்டான். இப்போ அவனுக்கு நடக்கவே சிரமம். இதிலே வேடிக்கையென்னன்னு, எந்த ராத்திரி அவன் காயப் பட்டானோ அந்த ராத்திரி ஏப்ரல் இருபதாம் தேதி சரியா நடு இரவு – அந்த நேரம் தான் நீயும் நானும் பகூசி மாயாவின் வீட்டை உடைத்து பகூசிமாயாவின் காலை வெட்டினோம். என் மகனுக்கும் அதே இடது கால் தான்.

நிகழ்ச்சி உரைப்பவன் : தந்தையின் பாவம் சேய்மேல் விழுந்தது. பழமொழி இதுவன்றோ, ஆனால் இவ்வளவு விரைவில் அல்ல

சிமோசோ : நான் குற்றத்தை இனியும் செய்யாம தடுத்தது இந்த நிகழ்ச்சிதான். இப்படி நான் எனக்குள்ளே தீர்மானிச்சிக் கொண்ட போது, என்னிடம் நானூறு 'யென்கள்' இருந்தன. கொள்ளையடிச்ச பணத்துலே மீதியிருந்தது அதைக் கொண்டு டோக்கியோவிலிருந்து என் ஊருக்கு திரும்பிப் போனேன். அந்தப் பணத்தோடு மீதி பணம் சேர்த்து என் பங்கான ஐந்நூறு யென்களாக்கி அதைக் கொண்டு போய் பகூசிமாயாவிடம் திருப்பிக் கொடுத்திட நினைச்சேன். போலீசிடம் என்னை நானே ஒப்புச்சுக்க நெனச்சேன். கொடுக்கற தண்டனையை ஏத்துக்குனு, உண்மை மனுசனாகிட தீர்மானிச்சேன். பணம் பெருக்க ஒரு மதுக் கடையையும் ஆரம்பிச்சேன். இப்போ உனக்கு தெரிகிறதல்லா, நான் எப்படி இப்படி உண்மையான மனுசனாக மாறினேன்னு. நீ கேட்கறதைப் போலே என்னாலே செய்ய முடியாதுன்னு இப்போ தெரிதுல்லே.

நிகழ்ச்சி உரைப்பவன் : இப்படி, அவன் தீமைக்குரிய தண்டனையை கூறினான்; ஆனால், சென்டா செவி சாய்க்கவில்லை.

சென்டா : உன் மகன் அந்த ராத்திரி காயப்பட்டதே பகூசி மாயாவை வெட்டியதாலேயே என்கிறாயோ ? இப்போ நீ திகிலடைஞ்சி போய் தைரியத்தை இழந்து இருக்கே.

சிமோசோ : ஆம். நீ சொல்றப்போல நான் தைரியத்தை இழந்தவன் தான். குற்றத்துக்கான தண்டனை என்ன என்பதை நான் உணர்ந்தே இருக்கேன் எனக்கு மட்டுமல்ல— ஆயிரம் யென்களை நாம் திருடியதால் பகூசிமாயா கடைசியா அவனை காப்பாத்திக்க நிலம், கடையெல்லாம் விற்றுப் போட்டு பஞ்சையா ஆகிட்டான். அவன் அடையாளமே இல்லாமே எங்கோ மறைஞ்சுட்டான். அவனுக்காக எங்கெங்கோ தேடியும் பயனில்லை. இன்று தற்செயலா நல்லா வளர்க்கப்பட்ட சிறுமி ஒருத்தி என் கடைக்கு வந்தாள். இரண்டு 'குவார்ட்ஸ்' 'சாய்சாஸ்' கேட்டாள். இதை யாருக்கு அனுப்பி வைப்பது என்று நான் கேட்டேன். அவள் சொன்னாள் பகூசிமாயாவிற்கு என்று. அந்த 'சாய் சாஸ்'ஸை நானே எடுத்துக்கொண்டு, அதே குடும்பம் தானோ என நிர்ணயிச்சுக்க, நான் சந்தேகப்பட்டு போனேன். அவங்க ரெண்டு பேரும்—தகப்பனும், மகளும் கடுமையான ஏழ்மையிலே சந்து வீட்டு குடிப்பகுதியிலே வாழறதை பார்த்தப்போ என் மனம் நொந்துப் போச்சு, அந்த நேரம் நான் அங்கே போனப்போ அதிருஷ்ட வசமா, அவங்க அந்த நேரத்தே அவசரமா நூறு யென்கள் தேவையா இருந்தாங்க. நான் ஏன் கொடுக்கிறேன் என்பதை அவங்களுக்கு சொல்லிக் கொள்ளாமலே அந்த தொகையை கொடுத்தேன். இப்போ மீதி 'தொகையை கொடுத்துட்டு, என்னை நானே ஒப்புச்சிக்க விரும்பினேன். ஆனால். அந்த நேரம் என் தகப்பனார் ஊரிலேருந்து டோக்கியோவிற்கு வந்துட்டார். நான் திருந்தினதுக்கு எத்தனை மகிழ்ச்சி அவருக்கு. அதனால் நான் என்னை ஒப்படைச்சுக்க காலம் தள்ளிப் போச்சு.

நான் ஆச்சரியப்பட்டேன். இன்ன சாயங்காலம் நீ வந்தப்போ. அவசரமான சேதி எனச் சொல்லி என்னை கேட்டுக் கொண்டப்போ என் தகப்பனும், தங்கையும் வீட்டிலே இருக்கும் போது இது பத்தி பேச முடியாத நிலை. என் வீட்டுப் பக்கத்து வீட்டாருடைய சுவர், மெல்லி சுவர் மூலம்தான் பிரிச்சுருக்குது அதனாலே யாரும் நம்ம பேச்சை கேட்டிட முடியும். அதனால் தான் யாரும் கேட்க முடியாத இடமா, பார்த்து இங்கே வந்தோம் இங்கே பேசினா பாதுகாப்பா இருக்கும்னு நெனச்சேன்.

இப்போ விளங்கிப் போச்சுல்லே, நான் ஏன் இப்படி செய்றேன்னு. எனக்குத் தெரியும் இது உனக்கு ஏமாத்தமா இருக்கும்னு. நான் நிசமா வருத்தப்பட்றேன்.

சென்டா : நீ எப்பவுமே இன்னவரை அமைதியானவன் தான். எனக்கு ஆச்சரியமா இருக்குது. உனக்கு என்ன வந்துடுச்சு ? ஜனங்க நம்மைப் போல கடவுள் உன்னை சபிச்சியிருந்தா நானும் மல்லவா தண்டிக்கப்பட்டிருக்கணும். நீ மட்டுமல்லே தண்டிக்கப்பட்டே. ஒவ்வொருவனுக்கும் தன் தகுதிக்கு ஏற்றுப் போலன்னு, பகூசிமாயாவல்லவோ இன்று திருடப்படனும். தவறான முறையிலே வியாபாரம் செஞ்சுதுக்காக தண்டனையா. அவனுடைய வியாபாரம் சிதைஞ்சதுக்கும் ஆண்டவன் விருப்பமாவே இருக்கும். அதனால் தான் அவன் வறுமையில் தள்ளப்பட்டான். அவனுக்கு திருப்பிப் பணம் தருவதைவிட முட்டாள்தனம் வேறு இருக்க முடியுமா ? கடந்த ஆறு மாசமா நான் சௌக்கியமா வாழறேன்; அதுவும் அந்த கொள்ளைக்கு பிறகு. வானலோகத்திலிருந்து தண்டிக்கக் கூடிய அளவுக்கு அவ்வளவு கெட்டது அல்ல, என்னுடைய பாவங்கள். இந்த இரவு என்னோடே வா. உன் கோழிக்குஞ்சு இதயத்தை சீர்படுத்தறதை விட்டுவிடு.

சிமோசோ : உனக்கு நான் இந்த வகையிலே உதவி செய்ய முடியாது. நீ எப்படிக் கேட்டாலும் சரி. நான் எப்போதுக்குமே குற்றம் செய்றதை விட்டுட்டேன். நீ தனிமையில் அந்த வேலையை செய்ய முடியாதென்றால், அதுவும் நல்லது தான். உன் வழிகளை இந்த இரவு கூட மாத்திக்கலாம்.

(அடுத்த ஏட்டில் முடியும்)

தலைப்பு

ப. லெட்சுமணன்

கடலும் வானும் ஒன்றை யொன்று தொட்டுக் கொண்டு நிற்பதைப் பார்த்துப் பார்த்து தன்னை மறந்த நிலையில் நின்ற மனிதனின் செவிகளில் "உலகம் வட்டமானது" என்று யாரோ அறைந்ததால் அவன் மயக்கமுற்று "Optical Illusion" என்று வடித்தானோ?

தனக்கு அதிர்ச்சி தராத விஷயங்களைப் பற்றி மனிதன் கவலைப்படுவதே இல்லை—ஏன்? அடுத்த வீட்டில் குழந்தை யொன்று இறந்ததைக் கண்டு சித்தம் கலங்காத உள்ளங்கள் சில, ஜப்பானில் நடந்த பூமியதிர்ச்சியைப் படித்து 'த்ஸொ' என்பானேன்?

தலைமயிர் ஒவ்வொன்ருக விழுந்தால் அறிவு விசாலமடைகிறது; பரந்த நெற்றி அதன் அறிகுறி என்று விம்மும் மனம், திடீரென்று தலைமயிர் முழுதும் கொட்டிவிட்டால் தொப்பியை நாடுவது ஏன்?

ஒவ்வொரு பல்லாக விழுந்தால் சிந்தனையில் ஈடுபடாத மனம் பயோரியா வந்தால் ஏன் நடுங்குகிறது?

சிறிது சிறிதாக நஞ்சை உண்டால், நஞ்சு தன் உடலில் உள்ள நாளங்களில் ஊறி, பின்னர் நஞ்சு உயிருக்கு ஊறு விளைக்கும் நிலை மாறுவதாக, நாகநந்தி பாத்திரத்தில் நாம் காணவில்லையா?

ஏன் இப்படி இயற்கை நிலை திரிய வேண்டும்?

அப்படியானல், "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பது பொய்யா? அல்லது,

"சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்பது பொய்யா?

அல்லது

"சிறு துளி பெரு வெள்ளம்" என்பது மட்டும் உண்மையா?

எந்த முடிவுக்கு வருவது? ஏன் முடிவுக்கு வர வேண்டும்? முடிவு எது? முதல் எது?

டங்...டங்...டங் . டங்...டங் டங்.. டங்...டங் டங்..டங்...டங்...சே...

பதினென்று தானு?...விட்ட குறை தொடுகிறது...முடிவு எது? முதல் எது?

... ...

அடுத்த வீட்டில் குழந்தை அழுகிறது.

தாய் குழந்தையை சமாதானப்படுத்துகிற வழியில், அது மசிவதாகத் தெரிவதில்லை. குழந்தைக்கு வேண்டியது என்ன?

பால்..

அவலையும், சவலையுமாய் ஏழெட்டு ஊரும் அந்த வீட்டின் அவளிடத்தில் பால் ஏது?

பால் குடி மறக்க அவள் செய்த முயற்சிகள் என்னென்ன?

வேப்பெண்ணெய் ..

விளக்கெண்ணெய்...

அப்பப்பா, கோந்தைக் கூட தடவி வைத்தாளே...

எல்லாவற்றையும் நக்கிவிட்டுச் சுவைக்கப் பழகிக் கொண்டது கன்று.

என்ன செய்வது?

தாதியைப் பால் கொடுக்க அமர்த்த அவளுக்குக் கட்டுமா?

தாதி பால் கொடுத்தாலும், தன் குழந்தைக்கு என்ன செய்வாள்? அவள் மட்டும் ஜீவநதியா என்ன?

வெள்ளமெல்லாம் வேளாண்மைக்கா பயன் படுகிறது?

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழாவெட்டியாய் வடியவில்லையா?

தண்ணீரால் வளர்ந்த அரிசிக்கு மட்டும் தான் சுவையிருக்குமா?

தண்ணீருக்கு சுவையே இல்லையா? வாழ வேண்டும் என்று தண்ணீர் எண்ணுதா?

பாலைக் கொண்டு என்னென்ன செய்யலாம்? தாதியின் பாலுக்கு விலை...தாயின் முலையில் தோண்டினுலும் ஊற்று தென்படாத போது?

ஐயோ, பாலை என்ன செய்வது?

... ...

கார் ஒன்று நழுவுகிறது. ம்...எதிர் வீட்டு ஜன்னலுக்குப் பின்னுல் ஆடை திருத்தப்படும். பெட்டி திறக்கப்படும். நூறே, ஐம்பதோ... மணியைப் பொறுத்ததாமே?

... ...

மணி ஒன்றுக்கு மேல் இருக்குமா? ஏன் அடிக்கவில்லை.

... ...

அடுத்த வீட்டுக் குழந்தை அழுகையின் கேவல் திரைப் பாட்டின் எதிரொலியாய், தேயாமலும், மீறுமலும் கேட்கிறது. பாலை என்ன செய்வது? ஆம். பால்கோவா செய்யலாம்.

பால்கோவாவுக்கு என்ன விலை வைப்பது? சே.. நினைத்தாலே குமட்டுகிறது.

... ...

கார் ஒன்று நழுவுகிறது...மூன்றுவதா...நான்காவதா...

எதிர் வீட்டு ஜன்னலுக்குப் பின்னுல்...ஐம்பதா...அத்தனையும் குழந்தையானுல்...

அப்பப்பா பயமாயிருக்கிறது. எவ்வளவு பால் தேவை?

கவிஞர்கள் வாய்க்கு சர்க்கரை போட வேண்டியது தான்.

... ...

எங்கும் நிசப்தம்.

குழந்தை முலைக்குவட்டிலேயே தூங்கியிருக்கும்.

விடிந்ததும் அவளுக்கு புட்டிப் பாலின் தன்மையை விளக்க வேண்டும் என்று ஓர் உறுதி.

... ...

விடிந்து விட்டதா? ஏன் விடியாதா?

கடிகாரம் நின்றுல் என்ன? ஐயருக்காக அமாவாசை காத்து நிற்குமா? கடிகாரம் ஏன் நின்றது? என்னென்னவோ நின்று விடுகிறது— கேவலம் கடிகாரம் நின்றுல் என்ன?

எது நின்றது?

எது நிற்கிறது?

ஏது நிற்கும்
நின்றிருந்தால் .
'ஆல் தானே 'அதி' முக்கியமானது.
ஆம் . ஆலும் வேலும் தானே பல்லுக்குறுதி. உண்மைதான்
பல்லுக்குறுதி...
பல் ..
குருதி...
இறுதி...
என்னது ?

கவிதையா ? பிதற்றலா ? என்ன இது ? இருந்தாற் போலிருந்து-- இப்பொழுது ..

தூத்துக்குடி. எக்ஸ்பிரஸ் எங்கு போய்க் கொண்டிருக்கும் ? திருவனந்தபுரம் மெயில் எங்கு போய்க் கொண்டிருக்கும் ? திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் எங்கு போய்க்கொண்டிருக்கும்?

தவறாமல், எதுகையும் மோனையும், காட்டாற்று போல், சந்தம் வழுவாமல், துள்ளுகிறது. என்ன அழகு ?

அழகு தான். எது அழகு ? ஏன், அழகு—எது இல்லை ?

அழகு தான் பேசாதே.
நான் பேசாமல் யார் பேசுவது ?
ஆமாம், உண்மை தான் பேசு.
பேசத்தான் செய்வேன்.

... ...

"நீங்கள் போங்கள். பல்லைத் தேய்த்து விட்டு வாருங்கள். பாத்ருமில் ஏனோ தண்ணி வரல்லே. சுருக்கப் போயிட்டு வாருங்கோ. கோடியிலே பைப்பு இருக்காப்பிலே இருக்கு .. நீ கொஞ்சம் சும்மா இரம்மா. சமத்து. காப்பியை ஆற்றவேணுமா ?"

"வாடி கண்ணு. கண்ணைத் துடைச்சுண்டு வரலாம்.'

"பனியில் ஏன் ?"

"பரவாயில்லை.'

கூ....

குப்.. குப் . ங்ர்ங்...ங்ர்ங்...

"புறப்பட்டுட்டுதே."

"ஒண்ணும் இல்லேம்மா. இன்னும் அரை மணியில் அடுத்த ஸ்டேஷன் வந்துடும். அதில் வந்துவிடுவார்.'

"இப்ப "

"கடைசி வண்டியிலே ஏறிக்கிடுவார்" ஏதோ ஒன்று நெஞ்சை நீவி விட முயன்றது.

கருப்பட்டியிலும், பழைய டிக்காஷனிலும் கலந்த காப்பி போல் வானம் ஜன்னல் வழியே தெரிந்தது

ஐயோ...அம்மா.. போதும்.

இறுகக் கண்கள் மூடிக் கொண்டன.

டக டக . த டா மிருகன்.. மிருகன்தடா .. சுழித்துக் கொண்டு கலங்கியது வெள்ளம்...

என்ன ஆச்சு ?

ஐயோ பகவானே.

காப்பி என் மேலெல்லாம் கசிந்தது.

ஓரே ஓலம் போல் கேட்கிறதே. ஒரே ஓலம். குருக்ஷேத்திரம் போல்.

பல் தேய்க்காமல் காப்பி குடித்தால் என்ன? இல்லை...பல்தேய்த்துக் கண்ட பலன் தான் என்ன ? முப்பத்திரண்டு பல்லைத் தேய்ப்பது நியாயம் என்றால்...? முளைக்காத ஈறைத் தேய்ப்பானேன் ? எல்லாம்...என்னைத் தேய்க்கத் தானே ?

குடத்தைத் தேய்த்தால் விளங்குமாமே ? ஆமாம், கல்லைத் தேய்த்தால் கூடத் தான் தேயும்.

எதைத் தேய்ப்பது ? தேய்க்க என்ன இருக்கிறது ? காலத்தைத் தவிர. காலத்துக்கு என்ன இருக்கிறது ? காலத்தைத் தவிர. காலத்துக்கு என்ன இருக்கிறது ? என்னைத் தவிர.

'வாடி கண்ணு. கண்ணைத் துடைச்சுண்டு வரலாம்.'' கண்ணையும் காணேன். துடைக்கக் கையும் வரவில்லை.

... ...

அடுத்த வீட்டுக்கு, அலாரக் கோழி திருப்பள்ளி எழுச்சியை பூபாளத்தில் பாடியது.

எழுந்து என்ன செய்வது ? பாலைப் பீய்ச்சி 'வெந்நீருள்ளில் விட வேண்டியது தான். என்ன கனம் கனக்கிறது ? நெஞ்சை விடவா ?

இதை எப்படி பீய்ச்சுவது ? வைக்கல் கன்றும் இல்லையே ? எங்கு பாய்ச்சுவது ? காவிரிப்பூம்பட்டினத்திலா ? கடவுளே ! முகத்தைக் கழுவலாம்.

மேஜைமேல் நோட்புஸ்தகங்கள் சிவப்பு பேனாவுடன் உறவாடக் குவிந்திருந்தன. என் சுமை போதாதென்று. அடுத்தவள் சுமை வேறு? 'வாயும் வயிறு' மாயிருக்கிறாள். மசக்கைக்காரி. என் துணையை நாடினாள்.

நான் என்ன புரசங் கொம்பா ? அவரைக்கும் வாழ்வளித்து நானும் துளிர்க்க வெறும் மூங்கில் தானே நான் ? வளைய மட்டும் தெரியும்.

வாழ . ? கடவுளே.

கடிகாரத்துக்கு சாவி கொடுத்து அதன் பாட்டையில் ஏற்றி விட்டேன்.

டிக் டிக் . டிக் ..

கவலையின்றி ஊஞ்சலாடியது குண்டலம்.

ஊசலாடிது மனமும்...வேறுபாடு எவ்வளவு ?

கடிகாரமாகி விட்டால் என்ன ? புரசங் கொம்பாகி விட்டால் என்ன ? சுமை தாங்கியாகி விட்டால் என்ன? அதாகி விட்டால் என்ன ? இதாகி விட்டால் என்ன ? அரிதாகி விட்டால் என்ன ?

அரியாகி விட்டால் என்ன ? பரியாகி விட்டால் என்ன ? நரியாகி விட்டால் என்ன ?

கரியாகி விட்டால் என்ன ? சாம்பராகி விட்டால் என்ன ? சிவமாகி விட்டால் என்ன ?

சவமாகி விட்டால் ஏன்ன ?

... ...

'அம்மா...பால்''

திடீரென தூக்கிப் போட்டது. வாங்க வந்து இருக்கும் வள்ளலோ ?

ம் இருப்பது போதாதா ? பாத்திரம் கைகளில். நடந்தன கால்கள்.

.. ...

மசக்கைக்-காரியின் கடமையில்ஈடுபட்டேன்.

''நான் செய்த புகைவண்டிப் பிரயாணம்' தலைப்பு. எங்கே என் தலைப்பூ ?...கடவுளே.

இலக்கிய கூட்டங்கள்

பி. ஆர். ராஜம் அய்யர் நினைவுநாள்

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம் சென்ற மாதத்தில் மூன்று இலக்கியக் கூட்டங்களை ஏற்பாடு செய்தது ஒரு 'ரிகார்ட்' ஆகும். பட்டிமன்றம் உயர்ந்துகொண்டே வருகிறது. திருப்திப் படக்கூடிய விஷயம்.

முதலில் பிப்ர்வரி 7-ம் தேதி வேதாந்தி—நாவலாசிரியர் பி. ஆர். ராஜம் அய்யரின் நினைவுக் கூட்டம் நடந்தது. தத்துவத்துறையில் நல்ல புலமை பெற்றுள்ள டாக்டர் டி. எம். பி. மகாதேவன் தலைமை வகித்தார். பி. எஸ். ராமையா, சி. சு. செல்லப்பா, தருமு சிவராமு ஆகியோர் பேசினார்கள். ஊ. ஜயராமன் வரவேற்பு உரைக்குப் பின் செல்லப்பா ராஜம் அய்யரின் வாழ்க்கை பற்றி இதுவரை தெரியவராத பல தகவல்களுடன் விவரமாகக் கூறி இன்றய தலைமுறைக்கு அவரை அறிமுகப்படுத்தினார். மகாதேவன் பேசுகையில், நமது இந்திய வாழ்க்கையில் வாழ்க்கையும் தத்துவமும் பிரிக்க முடியாதது. மேல் நாட்டில், பிரான்சில் ஜீன் பால் ஸாட்ரே தன் எகஸிஸ்டன்ஷியலிஸ தத்துவக் கொள்கையை நாவல், கதைகள் மூலம் பரப்புகிற மாதிரி ராஜம் அய்யர் வேதாந்தத்தை நாவல் மூலம் சுட்டிக் காட்ட முயன்றவர். கதைகளைக் கொண்டு தத்துவத்தை போதிக்கலாம் என்று சுவாமி விவேகாநந்தர் குறிப்பிட்டபடி நடந்தார், அவர் கவி திருஷ்டியால் வேதாந்த உண்மையை உணர்ந்தார், என்று குறிப்பிட்டார். அடுத்து பேசிய ராமையா 'கமலாம்பாள்' நாவலை எடுத்துக்கொண்டு நயமான ஆய்வு விமர்சனம் செய்தார். தருமு சிவராமு அவரது தத்துவப் பார்வையைப்பற்றி பேசினார். சென்ற நூற்றுண்டின் இறுதியில் மறைந்த ஒரு தலைசிறந்த வேதாந்த—படைப்பாள மேதைக்கு தொண்ணூற்றி ஆறு ஆண்டுகள் கழித்து ஒரு நினைவு நாள் கொண்டாடப்பட்டிருப்பது இப்போது தான் முதல் முதலாக. எவ்வளவு காலம் கடந்த செய்கை! இப்படியே முன்னோடிகளை மறந்து விடுவது என்றால்? போனது போகட்டும் வராமலே இருப்பதைவிட தாமதித்தாவது வருவது மேல். இனி தொடரட்டும். இந்த நினைவை தான் ஆரம்பித்து வைத்த தனிப் பெருமையை பட்டிமன்றம் தாராளமாக கொள்ளலாம்.

பெ. தூரன் கவிக்குரல்

அடுத்தபடியாக பெ. தூரன் கவிதைகளை தானே படித்துக் காட்டிய கூட்டம். கவிக் குரல் கேட்பதும் புதிது. கவிஞனுக்கும் திருப்தி. கவிதை வாசகனுக்கும் மகிழ்ச்சி. அவரது மற்ற கவிதைகளைவிட புதுக் கவிதை சோதனை முயற்சிகளில் அவர் திறமையை காண முடிந்தது. புதுக் கவிதைபற்றி அவர் கருத்துகளும் கிடைத்தது.

சிறுகதையாளர் விமர்சனம்

மூன்றாவதாக தி. க. சிவசங்கரன் தலைமையில் சுந்தர ராமசாமி, ஜயகாந்தன், தி. ஜானகிராமன் ஆகியோரது சிறுகதைகளைப் பற்றி அசோகமித்திரன், எழில்முதல்வன், கு. ராஜாராம், மூவரும் முறையே விமர்சித்தார்கள். மூன்று பேச்சுக்களும் சிரத்தையுடன், மனப்பூர்வமாக, அனுதாபத்துடன், அதே சமயம் குறையை எடுத்துக் காட்டியும் ஆழ்ந்து படித்து, சிந்தித்தும் பேசப்பட்டவைகள். தமிழ் இலக்கிய விமர்சனம் வளர்கிறது.

புதுக்கவிதை கூட்டம்

இலக்கிய சங்கம் சார்பில் நடைபெற்ற புதுக்கவிதைகள் கூட்டமும் ஒரு புது ஆரம்பம். கிளிப்பிள்ளைப் பேச்சு, தவளை மனப்பான்மை 'இலக்கியச் சந்திப்பு' கருத்துக்களுக்கு நடுவேயும் மேடைத் தாக்குதல் கிண்டல்களுக்கு இடையேயும் புதுக் கவிதை பற்றி ஒரு கூட்டம் நடந்தது என்றால்! புதுக் கவிதைக்காரர்கள், கி. அ. சச்சிதாநந்தமும், ஹரி சினிவாசனும் வாசகர்களுக்கு புதுக் கவிதையின் தன்மைகள் பற்றி பேசி அறிமுகப் படுத்தினார்கள். ஹிந்தி பேராசிரியர் கணேசன் ஹிந்தியில் புதுக் கவிதை பற்றி பேசினார்.

இங்கிலீஷில் படிக்கப்பட்ட தமிழ் புதுக்கவிதைகள்

சென்னையில் இதுவரை நடந்திராத இன்னொரு கூட்டம் சென்னை இளம் ஓவியர்கள், சிற்பிகள் சங்கம் சார்பில் அவர்கள் நடத்திய ஓவிய, சிற்ப கண்காட்சியை ஒட்டி இந்திய மொழிகள் சிலவற்றில் உள்ள கவிதைகளின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகளை படித்துக் காட்ட நடத்தப் பட்ட கூட்டம். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தியிலிருந்தும் மொழிபெயர்த்த கவிதைகளுடன் சுயமாக இங்கிலீஷில் எழுதப் பட்ட கவிதைகளும் படிக்கப்பட்டன. சிறந்த தெலுங்கு சிறுகதை ஆசிரியர் பத்மராஜு, தலைமை வகித்தார். இதை ஏற்பாடு செய்தவர் மலையாளத்திலும் இங்கிலீஷிலும் 'சமீக்ஷா, என்ற பத்திரிகையை நடத்துபவரும், சிறந்த விமர்சகரும், கவியும், சிறுகதை ஆசிரியருமான எம். கோவிந்தன். அவர் சமீபத்தில் ரஷ்யா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இலக்கிய யாத்திரை செய்ய இருக்கிறார்.

தமிழ்க் கவிதைகளில் ந. பி., கு. ப. ரா, சி. மணி, தி. சோ. வே., எஸ் வைத்திஸ்வரன், சுந்தர ராமசாமி, வல்லிக்கண்ணன், கி. அ. சச்சிதாந்தம், டி. கே. துரைஸ்வாமி, சி. சு. செ. முதலியோரது கவிதைகள் படிக்கப்பட்டன. கவிகளே சிலர் தங்கள் கவிதைகளை படித்தார்கள். நல்ல ஆரம்பம். இந்த கூட்டம். எம். கோவிந்தன் சொன்னது போல் 'எக்ஸ்பெரிமெண்ட்'. இனி இம்மாதிரி கூட்டங்கள் தொடர்ந்து நடக்கும்

ஆக, சென்னை இலக்கிய உலகம் சுரு சுருப்பாக இருக்கிறது.

EZHUTTHU Regd. No. M. 7109

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1.	பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ.	4–00
2.	வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ.	2–00
3.	அகல்யை (ஓரங்க நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ.	4–00
4.	ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ.	4–00
5.	சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ.	3–00
6.	சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ.	4–00
7.	வாடி வாசல் (நாவல்)	,,	ரூ.	4–00
8.	கோடை வயல் (கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ.	1–25
9.	கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ.	2-50
10.	புதிய பாதை (நாடகம்)	கோமல் சுவாமிநாதன்	ரூ.	3–00

கிடைக்குமிடம் :

எழுத்து பிரசுரம்

19–A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

EZHUTTHU

TAMIL LITERARY MONTHLY

Subscription Rates

Annual	Rs. 6/-
Three Years	Rs. 15/-
Foreign Annual	Rs. 8/-
Three Years	Rs. 20/-
Single Copy	50 pisae

Published every first of the English month.

Ad : EZHUTTHU

19–A. Pilliarkoil Street,

Madras–5

EZHUTTHU

TAMIL LITERARY MONTHLY

Advertisement Tariff

Inside Page

Full Page 15×20 cms	Rs. 80/-
Half ,, 15×10 / 7½×20	Rs. 4(/-
Quarter Page 7½×10 / 15×5	Rs. 20/-
Back Cover	Rs. 100/-
Inside Cover	Rs. 90/-

EZHUTTHU

19–A. Piliarkoil St.,

Madras–5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19. A, Pilliar Koil Street, Madras
Printed by M, Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras–5